அன்பளிப்பு 40p

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 08. 01. 1993

# 1993லும் இராணுவத் தீர்வுக்கே சிறீலங்கா முயற்சி

## இராணுவத்தளபதிகள் பலாலி அம்பாறை முகாம்களுக்கு விஜயம்

92ம் ஆண்டில் மாதமொரு தாக்குதல் என்ற வீதத்தில் தமிழீழமெங்கும் இராணுவ வெறியாட்டம் ஆடிய சிறிலங்காப் பாதுகாப்புப் படைகள் 93லும் புதிய தாக்குதல்களை ஆரம்பிக்க ஆயத்தமாவதற்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன. பலாலி சிறிலங்கா இராணுவத் தளத்திற்கு டிசம்பர் 31ம் திகதி கூட்டுப்படைத் தளபதி கமில்டன் வணசிங்க விஜயம் செய்துள்ளார். சோர்வும் விரக்தியும் அடைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கிறிஸ்மஸ்-புதுவருட கொண்டாட்டங்களில் கொழும்பில் சிங்கள அரசியல்வாதிகள் மகிழ்ச்சியுடன் இருக்க தாம் மட்டும் வடக்கு கிழக்கில் பலிக்கடாக்களாக நிறுத்தப்பட்டிருப்பதாக கருதினர் எனவும் இதனைச் சமாளிக்கவே கூட்டுப்படைத் தளபதி வடக்கின் இராணுவ நிலைகளுக்கு விஜயம் செய்தார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பலாலிக்கு விஜயம் செய்த கூட்டுப்படைத் தளபதி கமில்டன் வணசிங்க '1993ம் ஆண்டு பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக் கட்டுவதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். முழுச் சக்திகளையும் பயன்படுத்தி போராடும் மனவலிமையையும் தைரியத்தையும் பெறவேண்டும்' எனக் கூறியுள்ளார். இதே தினத்தில் அம்பாறைக்கு விஜயம் செய்த சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தின சிறிலங்கா இராணுவத்திலிருந்து ஆயிரக்கணக்கில் இராணுவத்தினர் விலகி ஓடுவதை கருத்தில் கொண்டு 'இராணுவத்துள் ஒழுக்கமும், அதிகரித்த பயிற்சிகளும் ஏற்படுத்தப்பட்டால்தான் இராணுவத்தால் சாதனைகள் செய்யமுடியும். இதற்கு அதிகாரிகளினதும், வீரர்களினதும் ஒத்துழைப்பு அவசியம்' எனக் கூறியுள்ளார்.

### 'விமானப்படை மூலம்'

இதற்கு முன்னர் கொழும்பில் பாதுகாப்புச் சபையினை கமில்டன் வணசிங்கா கூட்டி தாக்குதலுக்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்ததுடன் வடபகுதிக்கான புதிய சிறிலங்கா இராணுவத் தளபதி றொகான் தலுவத்தவுடனும் கலந்தாலோசித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. விமானப்படைத் தாக்குதல் மூலம் மட்டுமே விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்த வேண்டிய நிலையில் படையினர் உள்ளனரெனவும் இதற்கு போக்குவரத்திலுள்ள சிரமமும், குண்டுவீச்சுக்கு பெருமளவு பணம் செலவாவதும் தடையாக உள்ளது எனவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### 'கடற்படை மூலம்'

இதற்கிடை தரைமார்க்கமாக விடுதலைப்புலிகளை எவ்விதத்திலும் வெல்ல முடியாதென சிறிலங்கா இராணுவம் கருதுவதாகவும் இதனால் இவ்வருடத்தில் கடல் மார்க்கமாக தாக்குதல்களை அதிகரிக்க வசதியாக காங்கேசன்துறை துறைமுகம், காரைநகர் கடற்படைத்தளம் ஆகியவற்றை இணைக்கும் முயற்சிகளை ஆலோசிக்கும்படி சிறிலங்காப் பாதுகாப்புப் படைகள் சிறிலங்கா அரசிடம் கேட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

### 'பிரேமா' வின் புத்த போதனை

இவ்விதம் வடக்கில் யுத்த ஏற்பாடுகளை முடுக்கி விட்டிருக்கும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா 'வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வொன்றைக் காணுதல் இன்று மிக அவசரத் தேவையாக உள்ளது' என கண்டி சிந்தலதாமாளிகையின் எண்கோண மண்டபத்திலிருந்து கூறியுள்ளார். கருணை, மைத்திரி, பரிவு, நடுநிலைமையைப் பேணுதல் என்னும் நான்கு ஆயுதங்கள் புத்த பெருமான் அருளியவை எனவும் அவை நிலையான சமாதானத்தைப் பெறுவதற்கு உதவும் எனவும் கூறியுள்ளார். தீர்வு காண்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையைதான் ஆவலுடன் எதிர்பார்த்து இருப்பதாகவும் கூறியுள்ளார். ஆனால் பாராளுமன்றத் தெரிவுக்குழு கடந்த இரண்டாண்டுகளுக்கு மேலாக கூடியும் எவ்வித உருப்படியான ஆலோசனைகளையும் விவாதத்திற்குக் கூட எடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே சிறிலங்கா ஜனாதிபதியின் சொல்லும் செயலும்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

## கிளாலி கடலேரியில் சிறிலங்காப்படை வெறியாட்டம்

### * 60க்கு மேற்பட்ட பயணிகள் பலி [illegible]

கிளாலிக் கடலேரியில் பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற பதினாறு படகுகள் மேல் சிறிலங்கா கடற்படையினர் சனிக்கிழமை இரவு (02. 01. 93) கண்மூடித்தனமாக தாக்குதல் நடாத்தியுள்ளனர். அரைமணி நேரத்திற்கு மேலாக நீடித்த இக்கொடிய தாக்குதலுக்கு தப்பி ஆறு படகுகள் மட்டுமே கிளிநொச்சி மாவட்ட நல்லூர்க் கரையை அடைந்தன. ஏனைய படகுகளையோ, பயணிகளையோ பற்றி அறிய முடியவில்லை. இச்செய்தி அச்சுக்கு போகும் வரை பிரயாணிகளில் 6 பெண்களதும் 8 ஆண்களதும் சடலங்கள் கிளிநொச்சி மாவட்ட நல்லூர்க் கரையில் கரை ஒதுங்கியுள்ளன. அவற்றில் 9 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு

பூனாவில் கிழக்கைச் சேர்ந்த கிளிநொச்சிக் கல்வி அதிகாரி ஆறுமுகம் தர்மராஜா (51). கொடிகாமம் மடத்தடி வீதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பொலிஸ் வாகனச் சாரதி செல்லத்துரை (57). கொடிகாமம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த பேக்கரி உரிமையாளர் சதாசிவம் சுப்பிரமணியம் (40). கொக்குவில் குளப்பிட்டி வீதியைச் சேர்ந்த செல்லத்துரை பரமேஸ்வரி (42). கிளிநொச்சி ஆசிரியை நளினி (20) உம் அவரது தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி (48). பூநகரியைச் சேர்ந்த தேனீர்க்கடை உரிமையாளர் கோபால பிள்ளை (40). பளைப்புலம் கலட்டி பண்டத்தரிப்பைச் சேர்ந்த அருணாசலம் அன்னம்மா (36). வரணியைச் சேர்ந்த மன்னார் நீதிமன்ற ஊழியர் வின்வலிங்கம் செல்வத்துரை (28).

ஒரு படகு அத்தனை பேரும் பிணங்களான நிலையில் கரை ஒதுங்கியுள்ளதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவித்துள்ளன.

இக்கொடிய தாக்குதலில் பலியானவர்கள் 60 க்கு மேலாயிருக்கலாமென செய்திகள் தெரிவிக்கின்றன. இதுவரை படுகாயங்களுடன் தப்பிய ஐந்து பயணிகள் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதத்தில் மட்டும் 15 பயணிகள் சிறிலங்கா அரச பயங்கரவாதிகளால் கிளாலிக் கடலில் கொல்லப்பட்டதையடுத்து படகோட்டிகள் சங்கம் படகோட்ட மறுத்தது. இதனால், ஏண்ணாயிரத்திற்கும் மேற்பட்ட பயணிகள் நடுவழியில் சிக்கி பல நாட்கள் உணவு உறைவிடமின்றி தவித்தனர். இந்த பரிதாப நிலையினாலேயே படகோட்டிகள் மீளவும் படகுகளை ஓட்டத் தொடங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது கடற்புலிகள் இப்பகுதியில் இறந்தவர்களைத்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

## விடுதலைப் புலிகள் கண்டனம்

"சனிக்கிழமை இரவு (02-01-93) கிளாலி கடலேரியில் சிறிலங்கா கடற்படையினர் அப்பாவிப் பயணிகள் மீது நடத்திய கொடூரமான படுகொலையை தமிழீழ விடுதலைப்புலிகள் வன்மையாக கண்டிக்கின்றனர்.

தமிழ்ப் பொதுமக்களின் மேல் நடாத்தப்பட்டுள்ள இன அழிப்பு நடவடிக்கைகளான இவ்வரச பயங்கரவாதம் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காணும் முயற்சிகளுக்கு தடையேற்படுத்தும் தன்மையானது. இதன் காரணமாகவே தமிழீழ விடுதலைப்புலிகள் பொதுமக்கள் மீதான இராணுவ வெறியாட்டங்களையும் அழுத்தங்களையும் நிறுத்தி பேச்சுவார்த்தைக்கான சூழலை சிறிலங்கா அரசு உருவாக்க வேண்டுமென வற்புறுத்தி வருகின்றனர். புத்தரின் புனிதமான 'தம்ம' ஆயுதங்களை தாங்கி நிற்பவர்கள் தாம் எனக் கூறிக் கொள்ளும் சிறிலங்கா அரசின் இத்தகைய மிருகத்தனமான படுகொலைகள் தமிழீழ விடுதலைப்புலிகளால் திறந்து வைக்கப்பட்டிருக்கும் அமைதிக்கான கதவுகளை இறுக்கமாக மூடவே உதவும்." என விடுதலைப்புலிகள் விடுத்த கண்டன அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ■

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



## புலிவாலைப் பிடித்தவன்

'புலி வாலைப் பிடித்தவன் போல' என சிங்களத்தில் ஒரு பழமொழி உண்டு. இன்று சிறீலங்கா அரசின் நிலையும் அதுவாகவே உள்ளது.

சிறீலங்கா அரசு 1990 ம் ஆண்டு ஆனி 10ம் திகதி தமிழீழத்தின் மீது தனது இரண்டாம் கட்டப் போரை தொடங்கியபோது தனது ஆயுத பலத்தையும், இராணுவ ஆட்பலத்தையும் கொண்டு புலிகளை அழித்தொழித்து விட்டு தனது அடிவருடிகளான தமிழ்க்குழுக்களை கொண்டு பொம்மை ஆட்சி ஒன்றை உருவாக்கி தமிழீழத்தை ஆக்கிரமித்து விடலாம் எனக்கணக்குப் போட்டது.

ஆனால் தமிழீழ மக்களின் மனோ உறுதியும், விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்பு மிக்கஉறுதியான போராட்ட வலிமையும் சிறீலங்கா அரசின் இராணுவ ஆக்கிரமிப்பை முறியடித்ததும் அல்லாமல் சிறீலங்கா இராணுவக் கட்டமைப்பையே ஆட்டங்காணச் செய்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் 1991 யூலை 10 ம் திகதிய ஆனையிறவுப் போர் தமிழீழ விடுதலைப் புலிகளை மரபு வழி இராணுவமாக உலகிற்கு இனங்காட்டியது. பல்லாயிரக் கணக்கில் இராணுவத்தினரைக் குவித்து குடாநாட்டை முற்றுகையிட்டும் இராணுவ வேலிகளை அமைத்தும் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த சிறீலங்கா அரசு எடுத்த முயற்சிகள் எல்லாம் புலிகளால் முறியடிக்கப்பட்டதுமல்லாமல், சிங்களப் பகுதிகளில்கூட ஊடுருவி பல முகாம்கள் மீது வெற்றிகரமான தாக்குதல்களையும் நடத்தினர்.

இதனால் திகைத்து நின்ற பாதுகாப்புப் படையினருக்கு 92ம் ஆண்டு பேரிழப்புகளையும் தோல்விகளையும் ஏற்படுத்தியுள்ளது. கொப்பேக்கடுவவுடன் இராணுவ கடற்படைத் தலைமைகளின் அழிவுகளையும் சந்திக்கத் தொடங்கிய சிறீலங்கா பாதுகாப்பு படைகள் கொழும்பில் வைத்தே கடற்படைத் தளபதியையும் இழந்தன. Y8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதுடன் ஆனையிறவில் தோல்விகாணத் தொடங்கிய வான்படையினர் அம்பாறையில் வைத்து உலங்கு வானூர்தி சுட்டு வீழ்ப்பட்டதனால் பெரும் திகைப்படைந்தனர். புலிகளிடம் கடற்படைப் படகை பறிகொடுத்த கடற்படையினர், மூதூரில் மூழ்கடிக்கப்பட்டதுமல்லாமல் பெருமளவிலான ஆயுதங்களுடன் வந்த கப்பலும் மூழ்கியதால் செயலற்றுப் போயினர். இராணுவத்தினர் நிலையோ பரிதாபம். ஒரு புறம் ஆயிரக்கணக்கில் உயிரிழப்பால் தவிப்பு. மறுபுறம் இராணுவ முகாம்கள் காவலரண்கள் அழிப்புகளாலும் பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களைப் புலிகளிடம் இழந்ததாலும் திகைப்பு. இதனால் பல்லாயிரக்கணக்கில் இராணுவத்தினர் விலகியோடினர்.

இந்த இக்கட்டான சூழ்நிலைகளைச் சமாளிக்க சிறீலங்கா அரசு இராணுவத்திற்கு ஆட்சேர்க்க எடுத்த முயற்சிகளுக்கு சிங்கள மக்களிடை துளிகூட ஆதரவு கிட்டவில்லை. 'சிவில் அரசுக்கு எதிராக ஆயுதப்படையினர் மத்தியில் உள்ள சில சக்திகளைக் கொண்டு சதி ஒன்றை நடத்த முயற்சி' என ஜனாதிபதியின் ஆலோசகர் டயன் ஜயதிலகாவே இராணுவத்தின் மீது சந்தேகம் கொள்ளும் அளவிற்கு சிறீலங்கா அரசு தவிக்கிறது. அதேநேரம் சிறீலங்கா பாதுகாப்புப் படையினரிடை, தாம் பலிக்கடாக்களாக அரசால் மாற்றப்படுவதாகவும் ஆதங்கம் எழுந்துள்ளது. இதனைச் சமாளிக்க சிறீலங்கா அரசு அரசியல் தீர்வைப்பற்றி சிந்திக்க வேண்டிய நிலை. அதற்கு தமிழ்க்குழுக்களும் குறிப்பாக சிறீசபாரத்தினமும் நன்றியுடன் சிறீலங்கா அரசுக்கு உதவுகின்றனர். இதுவே வடக்கு கிழக்கு இணைப்பின்றி தமிழர் தாயகத்தை துண்டுபோடும் துரோகத்தனமான ஒன்பது அம்சத் திட்டம். தொண்டமான் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இருந்து விலகும் அளவுக்கு தீர்வு எதுவுமே இல்லாத திட்டம். திட்டத்தில் எதுவுமே இல்லாத நிலையிலுங்கூட, சமஷ்டி என்ற சொல்லைக் கேட்டதுமே, 'தனிநாடு ஒன்றை உருவாக்குவதற்கான முதற்படியாக சமஷ்டி அமைப்பு முறை அமைந்துவிடும். சமஷ்டி அரசமைப்பு முறையைக் கொண்ட நாடுகள் எல்லாம் இன்று பிரிந்து செல்கின்றன. இப்படியான பாரதூரமான விளைவுகளுக்கு எதிர்காலத்தில் எமது நாடு ஆளாகும் சாத்தியம் ஏற்படலாம்.' என முன்னாள் அமைச்சரும் சிங்களப் பாதுகாப்புச் சபையின் தலைவருமான காமினி ஜெயசூரியா எதிர்ப்பு ஒலி எழுப்பிவிட்டார்.

இந்நிலையில் சிறீலங்கா அரசு புலிவாலைப் பிடித்தவன் கதையாகத் தவிக்கிறது ■

## 92ல் இராணுவத் தோல்விகள்

- சீனன்குடா விமானத்தளம் தகர்க்கப்பட்டது.
- Y8 விமானம் ஆனையிறவில் சுடப்பட்டு விமானப்படைப் போக்குவரத்து சீர்குலைக்கப்பட்டது.
- கட்டுப்பொத்த இராணுவ முகாம் அழிப்பு.
- கொப்பேகடுவ உட்பட வடக்கு கிழக்கின் இராணுவத் தலைமைகள் அராலித்துறையில் அழிப்பு. இதனால் சிறீலங்கா இராணுவக் கட்டமைப்பே அழிவுற்றது.
- சிறீலங்கா கடற்படையின் நவீனப்படகு புலிகளால் கைப்பற்றப்பட்டது.
- பூநகரியில் 62 காவலரண்கள் அழிப்பு.
- கட்டைக்காட்டில் ஐந்து கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது.
- அம்பாறையில் உலங்குவானூர்தி சுடப்பட்டது.
- கொழும்பில் கடற்படைத் தளபதி கொல்லப்பட்டார்.
- பலாலி கிழக்கில் 150 காவலரண்கள் தகர்ப்பு.
- அம்பாறை பொலநறுவை பகுதிகளில் விமானப்படை, பொலீஸ் இராணுவம் மேல் பல வெற்றிகரமான தாக்குதல்கள்.
- மணலாறு, வவுனியா, மன்னார் திருமலை பகுதிகளில் இராணுவத்தின் மேல் பல வெற்றிகரமான தாக்குதல்கள்.

இவைகளின் விளைவாக மூவாயிரத்திற்கு மேற்பட்ட படையினர் இறந்து இரண்டாயிரத்தி இருநூறுக்கு மேற்பட்ட படையினர் படுகாயமடைந்து ஏழாயிரத்திற்கு மேற்பட்ட படையினர் ஆயுதங்களோடு ஓடினர். ■

## 92ன் முக்கிய இராணுவத் தாக்குதல்கள்

| பிரதேசம் | பெயர் |
|---|---|
| மட்டக்களப்பு | ஒபரேசன் நேசர் |
| வவுனியா | வன்னி விக்ரம |
| மன்னார் | கிறீன் பெல்ட் |
| முல்லைத்தீவு | சக் பல |
| தெல்லிப்பளை<br>பளை<br>பலாலி<br>தொண்டமனாறு | சண்டமாருதம் |
| மாதகல் | சீ லயன் |
| ஆனையிறவு | பல வேகய2 |
| தெல்லிப்பளை | ஏர்த் குவேக் |
| மன்னார் அடம்பன்<br>நானாட்டான் | சீக்ர பார |
| திருகோணமலை | மூன் சயின் |
| மட்டக்களப்பு | ஐயகங்கா |
| அம்பாறை | தங்கவாள் |
| வன்னி | கோல்ட்மைன்ட் |

# கிழக்கு மாகாண வாக்குகளைப்பெறவே

# அரசியல் தீர்வு பற்றி பிரேமதாசா பேசுகிறார்

**பி.பி.சி. நிருபர் கிறிஸ் மொறிஸ்**

"**1994**ம் ஆண்டு இறுதிக்கு முன்னர் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வாக்குகளைப் பெறுவதே சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் முக்கிய குறிக்கோளாக உள்ளது. இந்த நோக்கத்திற்காகவே பல இனமக்கள் வாழும் கிழக்கு மாகாணத்தில் ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்துவதில் அக்கறை காட்டுகிறார். அதேவேளை தமிழ் மக்கள் வாழும் வடக்கு மாகாணத்தை அவர் இராணுவத்தினரின் கையில் விட்டுவிட முயற்சிக்கிறார்."

இவ்வாறு பி.பி.சி. நிருபர் திரு. கிறிஸ் மொறிஸ், இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கென சிறீலங்கா ஜனாதிபதி நியமித்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தோல்வி குறித்து கருத்து வெளியிட்டுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது:

'பாராளுமன்றத் தெரிவுக்குழு அடுத்த ஆண்டிலும் தனது அமர்வுகளை மேற்கொள்ளக்கூடும். ஆனால் தற்பொழுது யுத்தம் நடைபெறும் பகுதிகளில் வாழும் மக்களின் தேவைகளுக்கு இந்த அமர்வுகள் பொருத்தமற்றவையாகவே இருக்கும்.

கடந்த பத்தாண்டுகளாக இலங்கைத் தமிழ் அரசியல் ஒரு புதிய தீவிர வடிவம் பெற்றுள்ளது. அரசின் ஆதரவிலான வன்முறைகளே இதற்கு காரணமாக அமைந்திருந்தன.

இலங்கை இராணுவம் புலிகளை முற்றாக ஒழித்து ஒரு தீர்வைக் காண வேண்டும். இது எதுவிதத்திலும் சாத்தியமாகுமெனத் தெரியவில்லை. எனவே வடக்கு கிழக்கு இணைந்த ஒரு சமஷ்டி அமைப்புத்தான் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்த்துவைக்கக் கூடிய நீண்ட காலத் தீர்வாக அமைய முடியும்.

இலங்கை அமைச்சரவையின் ஒரே ஒரு தமிழ் அமைச்சரான திரு. எஸ். தொண்டமான் 92ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தற்காலிகத் தீர்வொன்றை முன்வைத்தார். சுவிற்சலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள சமஷ்டி அமைப்பை விடச் சற்றுக் குறைவான அதிகாரப் பரவலாக்கலைக் கொண்டிருந்த இந்த யோசனைகளை இலங்கை செய்தி நிறுவனங்கள் பலமாகக் கண்டித்தன. இந்த அதிகாரப் பரவலாக்கம் பிரிவினையின் முதல்படி என்றும், நாட்டுக்குச் செய்யும் மாபெரும் துரோகம் என்றும் இந்தச் செய்தி நிறுவனங்கள் பிரச்சாரம் செய்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் புலிகளின் பாதைதான் சரியானது என்ற கருத்தினை அதன் தலைவர்களுக்கு வலியுறுத்துவதாக அமைகின்றன.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் இன்றைய ஆலோசனைகள் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரு நிர்வாக அமைப்பாக தற்காலிகமாக இணைக்கப்பட வேண்டும், என 1987 ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதற்கும் குறைவாகவே உள்ளன.

இன்று உத்தியோக பூர்வமாக இந்த இரு மாகாணங்களும் இணைக்கப்பட்டே உள்ளன. வடக்கு கிழக்கு மகாணசபை அரக கலைக்கப்பட்டபோதிலும் அதனால் ஏற்பட்டுள்ள அரசியல் இடைவெளியை தற்போது இலங்கை இராணுவமும் விடுதலைப் புலிகளும் நிரப்பிக் கொண்டுள்ளன.

1987 ம் ஆண்டின் இலங்கை இந்திய [illegible] தமிழ் மக்களுக்கு போதிய உரிமைகளை அளிக்கவில்லை என்பதற்காக புலிகளினால் நிராகரிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள், 'தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைக்கு தனிநாடு ஒன்றே நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தும் என நான் நம்புகிறேன்' என்று தெரிவித்திருந்தார். திரு. பிரபாகரனின் இந்தக் கருத்துக்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் மேலும் வலுப்பெற்றுள்ளன என்பதை மறுக்கமுடியாது. பாராளுமன்றத் தெரிவுக்குழு நிச்சயம் அவரது மனதை மாற்றியிருக்க முடியாது.

திரு. பிரபாகரன் ஓர் அரசியல்வாதியல்ல எதிர்காலத்திலும் அரசியல்வாதியாகமாட்டார். அது மட்டுமல்ல அரசியலை அவர் வெறுப்பவர் தனக்காகத் தனது போராளிகளே தொடர்ந்தும் பேச்சு நடத்துவதை அனுமதிப்பார்.

இந்த நிலையில் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஓர் இணக்கமான முடிவுக்கு வரத்தவறுவதினால், உண்மையில் பயனடைபவர்கள் புலிகள் இயக்கத்தினரேயாகும்.

மாற்று ஏற்பாடுகள் கிடைக்கும் வரை புலிகள் தொடர்ந்தும் தமது பாணியிலேயே சிறீலங்கா அரசாங்கத்தைப் சமாதானப் பேச்சுக்கு அழைப்பர்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஏற்பட்ட தோல்வி ஏனைய தமிழ்க் குழுக்களைப் பொறுத்தவரையில் பலத்த அடியாக அமைந்துள்ளது. புலிகளுக்கு எதிரான ஒரு அமைப்பினை உருவாக்க வேண்டும் என்ற தமது எண்ணத்தைக் கைவிடும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

சிறீலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் இறுதி முடிவுகளைத் தாம் நடைமுறைப்படுத்தத் தயாராக இருப்பதாக சிறீலங்கா ஜனாதிபதி கூறிவருகிறார்.

1994 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்னர் நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலில் தமக்கு வாக்குகளைச் சேகரிப்பதே திரு. பிரேமதாசாவின் முக்கிய குறிக்கோளாக உள்ளது.

இந்த நோக்கத்துக்காக பல இனமக்கள் வாழும் கிழக்கு மாகாணத்தில் ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்துவதில் திரு. பிரேமதாசா அக்கறை கொள்ளலாம். அதேவேளையில் தமிழ் மக்கள் வாழும் வடக்கு மாகாணத்தை அவர் இராணுவத்தினரின் கையில் விட்டுவிட முயற்சிக்கலாம். ■

## வாகரை, மாங்கேணி, உன்னிச்சை இராணுவ முகாம்கள் மூடப்பட்டன

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. வாகரை, மாங்கேணி, உன்னிச்சை ஆகிய இடங்களில் இயங்கிய மூன்று இராணுவ முகாம்களுமே மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகரை, மாங்கேணி ஆகிய படை முகாம்கள் வாழைச்சேனைக்கும், திருமலைக்கும் இடையேயான பாதையில் காடு சார்ந்த பிரதேசத்தில் இயங்கிவந்தன. உன்னிச்சை இராணுவமுகாம் மட்டக்களப்புக்கு மேற்கே படுவான்கரை பகுதியில் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

## "றேடியோ தோன்" (RADIO THON) வானொலி நிகழ்ச்சி

அவுஸ்திரேலியாவில் தமிழ் வொயிஸ், மெல்போர்ன் கம்யூனிட்டி ரேடியோ ஆகியவை இலங்கைத் தமிழர் சம்மேளனத்துடன் இணைந்து தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினர்க்கு நிதி சேகரிப்பதற்காக 'றேடியோ தோன்' எனும் ஐந்தரை மணி நேர வானொலி நிகழ்ச்சியை, கடந்த நத்தார் கொண்டாட்ட காலத்தில் வழங்கினர் ■

## சாவகச்சேரிப் பகுதியில் தொல் பொருட்கள் கண்டுபிடிப்பு

சாவகச்சேரிப் பகுதியில் பழமை வாய்ந்த நாகதம்பிரான் விக்கிரகம் கண்டுபிடித்த காணியில் தொன்மையான எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றும் பானை ஓடுகளும் மேலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள காணியொன்றில், மரவள்ளி நடுவதற்காக நிலத்தைக் கொத்தியபோது செம்பினாலான ஒன்றரை அடி உயரமுள்ள நாகதம்பிரான் சிலை ஒன்று மீட்கப்பட்டது.

இந்தக் காணிக்கு அருகில் உள்ள மற்றொரு காணியில், சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் இரண்டு அடி உயரமான அம்மன் விக்கரகம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது ■

**பேச்சுவார்த்தைச் செய்திக்கு மறுப்பு**

'வெளிநாட்டில் சிறீலங்கா அரசுடனோ அல்லது சிறீலங்கா அரசின் பிரதிநிதிகளுடனோ தமிழீழ விடுதலைப் புலிகள் உத்தியோக பூர்வமான எந்தப் பேச்சுவார்த்தைகளையும் நடத்தவில்லை' என லோரன்ஸ் திலகர் தெரிவித்துள்ளார்.

முதலுதவி நூல் வெளியீடு

செஞ்சோலை [illegible] திரு. போசன் எழுதிய 'ஏன் இந்த முதலுதவி' என்ற நூல் [illegible] வெளியிடு செய்யப்பட்டுள்ளது. [illegible] முல்லை மாவட்டத் தலைமை [illegible] மருத்துவ கலாநிதி [illegible] முதலுதவி நூல்கள் மக்களுக்கு பயனுடையதாகவும் நம்பிக்கை அளிப்பதாகவும் இருக்கிறது என்றார்.





செஞ்சோலை இல்ல விளையாட்டுப் போட்டியில் சிறுவர்களின கயிறு இழுத்தல் போட்டி நடைபெறுவதையும், கால் கட்டி ஓடும் போட்டி ஆரம்பமாவதையும் காணலாம்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர் நாள்

# மக்கள் எழுச்சியுடன் கலந்து கொண்டனர்.

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இடங்களில் மாவீரர் நினைவாக கலை நிகழ்ச்சிகளும் ஊர்வலங்களும் இடம்பெற்றன.

சிங்கள இராணுவ நெருக்கடிக்கும் தொடர்ச்சியான மழைத்தூறலுக்கும் இடையில் மக்கள் இந்த எழுச்சி நாளை அனுட்டித்தனர்.

மாவடிமுன்மாரிப் பிரதேசம், மயிலவட்டவான், கிரிமிட்டை, பொண்டுகள்சேனை, சிவமூர்த்திமேடு, வாகரைப் பிரதேசம் போன்ற இடங்களில் மாவீரர் வாரத்தை முன்னிட்டு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

மயிலவட்டவான் என்னுமிடத்தில் மக்கள் எழுச்சி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். தமிழ்ச் சிறுமியர்களின் கிராமிய பண்பாட்டு நிகழ்ச்சிகளான கும்மி, வசந்தம் என்பனவும் இடம்பெற்றன. இதற்குரிய பாடல்கள் போராட்ட நிகழ்வுகளுக்கு ஏற்றவாறு இயற்றப்பட்டிருந்தது.

சிவமூர்த்தி மேடு என்னுமிடத்தில் அமைந்திருந்த மாவீரர் துயிலகத்தில் மட்டக்களப்பு அம்பாறைப் பிராந்திய விசேட தளபதி திரு. கருணா அவர்கள் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றி வைபவத்தை ஆரம்பித்து வைக்க, மாவீரர் சமாதிக்கு மலர் மாலைகள் போடப்பட்டன. மாவீரர் நாளையொட்டி மரதன் ஓட்டமும், பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டமும், சாப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியும் அஞ்சல் ஓட்டமும் இடம்பெற்றன.

மாலையில் கலை நிகழ்ச்சிகளும் கூட்டமும் இடம்பெற்றது. போராட்ட நிகழ்ச்சிகளை சித்தரிக்கும் கலை நிகழ்ச்சிகளும் அத்தோடு தமிழீழ இசைக் குழுவினரின் எழுச்சி இசை விருந்தும் இடம்பெற்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறைப் பிராந்தியத்தின் சிவமூர்த்திமேட்டுப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. விக அவர்களின் தலைமையில் நடத்தப்பட்ட எழுச்சிக் கூட்டத்தில், பிராந்திய விசேட தளபதி திரு. கருணா அம்மான் அவர்கள், அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள், துணைத்தளபதி திரு. ரமேஸ் அவர்களும் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களான திரு. மனோ மாஸ்ரர், திரு. உருத்திரன் மாஸ்ரர், திரு. யோகன் (பாதர்) ஆகியோரும் உரையாற்றினார்கள்.

மாவீரர் நாள் நினைவாக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி, மாவீரர் கருத்துப் படப் போட்டி, மாவீரர் இலட்சனை வரையும் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும், விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

மாவீரர்களின் பெற்றோர்கள் விளக்கேற்றி ஆரம்பித்து வைத்த நிகழ்ச்சிகளின் போது இடையிடையே மழை தூறினாலும் மக்கள் மழையையும் பொருட்படுத்தாமல் நிகழ்ச்சிகள் நிறைவு பெறுமட்டும் அமர்ந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். ■

## பாய்க் கப்பல் அமைப்பில் மாவீரர் பந்தல்

பண்டைய காலத்தில் தமிழர் போருக்குப் பயன்படுத்திய பாய்க் கப்பலின் தோற்றத்தைப் போன்று அமைக்கப்பட்ட பந்தலொன்று, கடந்த மாவீரர் வார காலத்தில் பருத்தித்துறையில் செய்து வைக்கப்பட்டிருந்தது.

இப்பந்தல் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களால் பருத்தித்துறைப் பழைய பஸ் நிலைய மைதானத்தில் திறந்து வைக்கப்பட்டது. இக்கப்பலில் கடற்புலிகள் அணியைச் சேர்ந்த 02 மாவீரர்களின் உருவப்படங்களும் வைக்கப்பட்டிருந்தன. ■

## பருத்தித்துறையில் தங்குமிட வசதி

பருத்தித்துறை துறைமுகம் ஊடாக கப்பலில் பயணம் செய்யும் நோயாளிகள் மற்றும் பயணிகள் வசதிக்காக பருத்தித்துறையில் தங்குமிடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை பழைய தபால் அலுவலகக் கட்டிடத்தை தங்குமிடமாக அமைப்பதற்கான ஏற்பாடுகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த இக்கட்டிடம் பயணிகள், நோயாளிகள் நலன் குறித்து புனரமைக்கப்பட்டு வருகின்றது. ■

## உணவு உற்பத்திக்கு ஊக்குவிப்பு நடவடிக்கை

யாழ் மாவட்டத்தில் யு.என். எயிட்-கெயர் விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 7500 விவசாயக் குடும்பங்களுக்கு உள்ளீடுகள் வழங்கி உணவு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த உதவிகள் யாவும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட உள்ளது.

இதில் முதல் கட்டமாக 3000 விவசாயக் குடும்பங்களுக்கு நெல் உற்பத்திக்கான உள்ளீடுகள் வழங்கப்படும்.

மேலும் 45,00 விவசாயக் குடும்பங்களுக்கு மேல் நாட்டு மரக்கறி வகை விதைகளும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ■

## பலசரக்கு கடை கொள்ளை திருடர்கள் கைதாகினார்கள்

குருநகர் பாஷ்சால் வீதியில் உள்ள பலசரக்கு கடையொன்றில் ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளது.

இத்திருட்டை தமிழீழ காவல்துறையினர் கண்டுபிடித்ததுடன் களவு போன பொருட்களின் ஒருபகுதியையும் மீட்டு திருடர்களையும் கைது செய்து புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். ■

## யாழ். கோட்டையினுள்ளும் மாவீரர்வார அலங்காரங்கள்

மண்மீட்புப் போரில் தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை [illegible] நினைவுகூரும் [illegible]க்கான மாவீரர் வாரம் மூன்று நாட்கள் எழுச்சி பூர்வமாக தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

1505 ஆம் ஆண்டுமுதல் காலா காலமாக அன்னியர்களின் பிடியில் சிக்கியிருந்த யாழ். கோட்டையில் இருந்து அன்னியர் விரட்டியடிக்கப்பட்டு அங்கு தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்பட்டு அங்கும் தமிழீழ மாவீரர் வார எழுச்சி நிகழ்வுகள் தினசரி நடைபெற்றது.

'வியர்வை சிந்தி இரத்தம் சிந்தி தாங்கொணாத் துன்பத்தில் பரிசாகப் பெறுவதுதான் சுதந்திரம். சுதந்திரமில்லா மனித வாழ்வில் அர்த்தமேயில்லை என்ற தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனது வாசகமும், மரணம் ஒரு தடவைதான் வரும் அதற்காக மானத்தை விற்று சீவிக்க முடியுமா? இழப்புக்குப் பயந்து இதனை அழிய விட முடியுமா? என்ற தியாகி திலீபனின் வாசகமும் கோட்டையின் வாசலின் இரு மருங்கிலும் எழுதப்பட்டிருந்தது. கோட்டையின் முன்மண்டபத்தில் வீரச்சாவடைந்த சுமார் 66 போராளிகளது உருவப்படங்கள் இரு மருங்கிலும் வைக்கப்பட்டிருந்தது. இருபக்கச் சுவர்களிலும் போராளிகளினது எழுச்சியூட்டும் கோசங்கள் பொறிக்கப்பட்டிருந்தது.

கோட்டையின்பிரதான மைதானத்தில் சிறைக்கூடத்தின் அருகில் கோட்டையின் கற்களால் அமைக்கப்பட்ட விசேட மேடையில் சுமார் இருபது அடி உயரமான சிவப்பு மஞ்சள் வர்ணக் கம்பமொன்றில் தேசியக் கொடி ஏற்றப்பட்டிருந்தது.

யாழ் கோட்டை அலங்காரம் மக்களின் பார்வைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. ■

## யாழ் ஆஸ்பத்திரியில் 283 சிசு மரணம்

யாழ் மாவட்டத்தில் அண்மைக்காலமாக குழந்தைகளின் இறப்பு விகிதம் பெருமளவு அதிகரித்துக் காணப்படுவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ் போதனா சாலைப் பதிவேட்டின்படி கடந்த 7 மாத காலத்துள் 283 சிசு மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இவற்றில் 148 குழந்தைகள் பிறந்து இறந்ததாகவும் மிகுதி 135 குழந்தைகளும் தாயின் வயிற்றினுள்ளேயே இறந்து பின் பிறந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கில் தொடரும் யுத்தம், போதிய போசாக்கின்மை மற்றும் உளரீதியான காரணங்கள் ஆகியன இவ் இறப்பு விகித அதிகரிப்புக்கு காரணங்களாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. ■

## திருமலை மாவட்ட மாவீரர் நினைவு கூரல்

யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் திருமலை மாவட்ட மாவீரர் பணிமன்றவினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'திருமலை மாவட்ட மாவீரர்களின் நினைவு கூர்தல் நிகழ்வுகள்' நடைபெற்றன. இந்நிகழ்வுகளில் தினமும் காலை 9.00 மணிக்கு போராளிகளின் உறுதிமொழி (சத்தியப் பிரமாணம்) ஏற்கும் நிகழ்ச்சி நிகழ்த்தப்பட்டு, தேசியக் கொடிக்கு வணக்கம் செலுத்தப்பட்டு கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களினால் இசைக்கப்பட்ட தேசிய கீதத்தைத் தொடர்ந்து மலரஞ்சலி, மௌன அஞ்சலி செலுத்தி, தமிழ்த்தாய் வணக்கப்பாடலுடன் காலை நிகழ்ச்சிகள் நிறைவெய்த, மாலையில் பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்று வந்தது குறிப்பிடத்தக்கது. ■

## கிளிநொச்சியில் 810 பேருக்கு கெயர் உதவி கிடைத்தது

கிளிநொச்சி மாவட்டத்தில் கெயர் விவசாய உதவித் திட்டம் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினூடாக மொத்தமாக 810 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் 310 குடும்பங்களுக்கு நெற்செய்கைக்கும், 510 குடும்பங்களுக்கு மேட்டு நிலப்பயிர்ச் செய்கைக்கும் உதவிகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் 500 ஏக்கரில் நெற்பயிரும் 250 ஏக்கரில் மேட்டு நிலப்பயிரும் செய்வதற்கு உதவி வழங்கப்பட்டுள்ளதால் கிளிநொச்சி விவசாயிகள் பெரிதும் நன்மை அடைகின்றார்கள். ■

மட்டக்களப்பு கரவெட்டியில்

## இராணுவ சுற்றிவளைப்பில் மூவர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கரவெட்டி கிராமம் சிறீலங்கா இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டது. இச்சுற்றிவளைப்பின்போது மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி கிராமத்தை சுற்றி வளைத்த சிறீலங்கா இராணுவத்தினர் அக்கிராமத்தில் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தினர். தேடுதல் நடத்தியபோது மூவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அத்துடன் அக்கிராம மக்கள் கடுமையாக சிறீலங்கா இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு நடைபெற்ற விசாரணைகளைத் தொடர்ந்து பலர் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். ஏனையவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ■

## யாழ் மறை மாவட்ட புதிய ஆயர் அகதிகளைச் சந்தித்தார்

யாழ் மறை மாவட்டத்தின் புதிய ஆயராகப் பொறுப்பேற்றுள்ள பேரருட் திரு தோமஸ் சௌந்தரநாயகம் அவர்கள் மானிப்பாய் பங்கிற்கு வருகை தந்து அப்பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் அகதிகளாக இடம்பெயர்ந்து வந்து தங்கியிருக்கும் இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு, மாரீசன்கூடல், சில்லாலை ஆகிய பங்குகளைச் சேர்ந்த மக்களை நேரில் சந்தித்து குறைபாடுகளைக் கேட்டறிந்து ஆறுதல் கூறினார்.

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு வருகை தந்த ஆயர் அவர்களுக்கு தமிழ்ப்பண்பாட்டு முறைக்கிணங்க மங்கள வாத்தியங்கள் முழங்க மலர் தூவி ஆராத்தி எடுத்து வரவேற்பு அளிக்கப்பட்டது.

மானிப்பாய் மறை மாவட்ட முதல்வர் அருட்திரு அன்டன் இராசநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த வரவேற்பு உபசாரத்தில் மறை ஆசிரியர் திரு பங்கிராஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனையடுத்து ஆயர் அவர்கள் மறையுரை நிகழ்த்தியதையடுத்து அங்கு வருகைதந்திருந்த குருக்களோடுடன் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான சிறார்களுக்கு புதுநன்மை வழங்கும் வைபவமும் இடம்பெற்றது. ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# புலிகளின் வாக்குறுதி மீது எமக்கு சந்தேகம் இருக்கவில்லை

"மீட்பு நிதிக்கு வழங்கிய பவுணின் பெறுமதியை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்பதில் எனக்கு சந்தேகம் இருக்கவில்லை. எப்போதோ ஒரு நாள் அது திரும்பக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்தான் இருந்தேன். ஆனால் இவ்வளவு விரைவில் திருப்பித் தருவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை." இவ்வாறு ஆசீர்வாதம் வீதியைச் சேர்ந்த சீனியர் தியாகராஜா நாவலர் மண்டபத்தில் மீட்புநிதிக் கடனை மீளப்பெற்றுக் கொண்டபோது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: 'பொறுப்பாளர் தரும் பொற்காசைப் பவுத்திரப்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்பதுதான் எனது ஆசை. அது அடையாளமாக என்னிடம் எப்போழுதும் இருக்கும். மீளவும் மீட்பு நிதி தேவைப்படும் பட்சத்தில் எனது வருமானம் இப்போதிருப்பதை விடத் தேறினால் மேலும் அதிகமாகக் கொடுப்பேன். முகமலர்ச்சியுடன் மிக ஒழுங்கான முறையில் மீட்பு நிதிக் கடனை மீளக் கையளிப்பது ஒரு சந்தோசமான காரியம்' என்றார்.

'முன்பு சில குழுக்கள் என்னிடம் வற்புறுத்திப் பணத்தைப் பெற்றுக் கொண்டன. தமிழீழ மீட்பு நிதிக்காக விடுதலைப் புலிகள் அமைப்பு விடுத்த பகிரங்க வேண்டுகோளை அடுத்து மீட்பு நிதியை மனமுவந்து வழங்கினேன்" என்று மீட்பு நிதி கடனை மீளப் பெற்றுக்கொண்ட யாழ். செயலகத்தில் கடமை புரியும் என். நடராசா தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "எனது மகளின் சங்கிலியைத்தான் மீட்பு நிதியாக வழங்கினேன். இந்த நிர்ப்பந்தமான கால கட்டத்தில் எனது மகள் சங்கிலி போட்டுத்தான் அழகு பார்க்கவேண்டும் என்ற அவசியமில்லை. மீட்பு நிதியை பவுண் காசாக மீளப் பெற்றுள்ள நான் அதைப் பத்திரப்படுத்தி வைத்திருக்க விரும்புகிறேன். தவிர்க்க முடியாத நெருக்கடி ஏற்படும் சமயத்தில் அதை என்ன செய்யலாம் என்பதைப் பற்றி யோசிக்கலாம். என்றார். ■

# கோப்பாய் பகுதி குளத்தில் புதை பொருள் ஆராய்ச்சி

கோப்பாய் பகுதியில் 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட சில பொருட்கள் நிலத்திற்கு அடியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கோப்பாய் வடக்கு இராச வீதிக்கு அருகாமையில் பொருட் நிறுவனத்தினரால் நாச்சிமார் குளம் புனரமைக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது மூன்றரை அடி ஆழத்தில் செங்கற் கவர்களும், கறுப்பு நிற ஒருவகை களிப் பொருளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவை சுமார் 400 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மேலும் இப்பொருட்கள் பற்றிய ஆராய்ச்சியில் யாழ். பல்கலைக்கழகத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். ■

# உழைப்பாளரை இழந்த பெண்களுக்கு சுயதொழில்

யாழ் குடாநாட்டில் உழைப்பாளர்களை இழந்த பெண்களுக்கு சுயதொழில் நடவடிக்கையாக புதிய திட்டமொன்றை சிறுவர் பாதுகாப்பு நிதியம் செயற்படுத்துகின்றது. இதன் மூலம் இப்பெண்கள் கணிசமான வருமானத்தைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பாக அமைகிறது.

குடும்பத்தில் உழைக்கும் உறுப்பினர்களை இழந்த பெண்களுக்கு துணிவகை கொடுத்து 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் ஆடைகளை தைப்பதன் மூலம் அவர்களுக்கு ஆடைக்கான தையல் பணத்தை கொடுத்து மீண்டும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் ஆடைகளைபெற்றுக் கொள்கின்றது.

இவ்விதம் பெற்ற ஆடைகள் அகதிகள் முகாமில் உள்ள 5 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்றது. ■

# அகதி முகாம்களை பொறுப்பேற்க தயக்கம்

யாழ் மாவட்டத்தில் இயங்கும் அகதி முகாம்களைப் பொறுப்பேற்க அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் தயக்கம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் விஜயம் செய்த மேற்படி பிரதிநிதிகளை சந்தித்த யாழ் அரசாங்க அதிபர் மற்றும் அரச சார்பற்ற இணையங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் முகாம்களை பொறுப்பேற்குமாறு விடுத்த வேண்டுகோளுக்கு அவர்கள் திருப்திகரமான பதிலை அளிக்கவில்லை என தெரியவருகிறது.

இக் கோரிக்கைக்கு பிரதிநிதிகள் பதிலளிக்கையில்; 'இம்முகாம்களை பாராமரித்து வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்போது என்னென்ன பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றார்களோ அதே பிரச்சனைகளையே நாமும் எதிர்நோக்க வேண்டிவரும். முதலில் தேவையான பொருட்களை யாழ்ப்பாணம் எடுத்துவருவதற்கான ஒழுங்கான பாதையை அமைத்து அரசினால் விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்க வேண்டும். அதன் பின்பே நாம் முகாம்களை பராமரிப்பது பற்றி பரிசீலிக்கலாம்', எனப் பதிலளித்துள்ளனர். ■

# சுமார் இரண்டரை லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு இல்லை

சிறீலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக யாழ் குடாநாட்டில் மட்டும் சுமார் ஒரு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரம் பேர் தமது தொழில்களை இழந்துள்ளனர். இவற்றைவிட சுமார் எண்பத்தெட்டாயிரம் பேர் தொழில் செய்யக்கூடிய வயதை அடைந்தும் தொழில் வாய்ப்புகள் எதுவும் இன்றி இருக்கின்றனர். எனவே தற்போது மொத்தமாக சுமார் 2,36,000பேர் தொழில் வாய்ப்பின்றியும் வருமானம் இன்றியும் வாழ்ந்து வருகின்றனர். யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தகவல் வங்கியில் இருந்து மேற்படி தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. ■

# லெப். கேணல் ஜோயின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி

"உலகிலேயே மிகச் சிறந்த தென போற்றப்படும் தலைமைத்துவத்தையும், மனோ வலிமை மிக்க போராளிகளையும் கொண்டது எமது விடுதலைப் போராட்டம். அனைத்து வளங்களும் போதியளவு இருந்தும் மக்களின் முழுமையான பங்களிப்பு இன்மையால் நீண்டு செல்கின்றது."

இவ்வாறு நீகன் நகரில் நடைபெற்ற மட்டு அம்பாறை மாவட்டத் தளபதி லெப்டினன்ட் கேணல் ஜோயின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் தெரிவித்தார்.

நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாம் பணம் கொடுத்து வாங்கிய ஆயுதங்களை விட எதிரியிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்கள் குவியலாகக் கிடக்கிறது. மக்களின் பங்களிப்பால் போதிய பொருளாதாரம் எம்மிடம் உண்டு. இருந்தும் மக்களின் முழுமையான பங்களிப்பு இன்மையாலேயே இப்போராட்டம் நீண்டு கொண்டு போகிறது. போராட்டம் நீள நீள இழப்புக்கள் அதிகமாகவே இருக்கும். குறுகிய காலத்தில் எமது தாயகத்தை மீட்டிட மக்கள் இன்றே இணைய வேண்டும். மக்கள் முழுநேரப் பங்காளிகளாக மாறும் பட்சத்தில் விடுதலை விரைந்து வரும் என்றார்.

தொடர்ந்து செல்வன் பிரதீபன் உரையாற்றுகையில், "இந்த தேசத்தின் விடுதலைக்காக தமது உயிரைத் துச்சமென எண்ணி வித்தானவர்கள்தான் இந்த மாவீரர்கள். எந்த சக்தி எப்படி வந்தாலும் முடியும் என்று உறுதி கொண்டு நம்புவனுக்கு இயலாதது ஒன்றுமே இல்லை என்ற நம்பிக்கையுடன் உறவுகளைப் பிரிந்தும், பாச உறவுகளுக்கு வரம்பு கட்டியும் உண்மையான உலகம் ஒன்று உயிர்க்கட்டும். என்றோ ஒரு நாள் வெற்றி கிட்டும் என்ற எண்ணத்துடன் போராடி மடிந்தவர்கள்தான் மாவீரர்கள். இவர்கள் காலத்தால் அழியாத வீரகாவியங்கள் தேசத்தின் விடிவெள்ளிகள்", என்றார். ■

# கரை ஒதுங்கிய முஸ்லீம் மீனவருக்கு புலிகள் முதலுதவி

வாழைச்சேனைக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற ஐந்து மீனவர்களின் இயந்திரப்படகு கடலில் அலையினால் சேதமுற்றதனால் நான்கு மீனவர்கள் கடலில் இறந்தனர். ஒருவர் ஆபத்தான நிலையில் காயங் கேணி கடற்கரையில் கரை ஒதுங்கியபோது விடுதலைப் புலிகள் முதலுதவிச் சிகிச்சை செய்து அவரைக் காப்பாற்றி பாதுகாப்பாக அவரது வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

விடு சென்ற மேற்படி முஸ்லீம் மீனவர் விடுதலைப் புலிகளின் மனித நேயத்தை பிரச்சாரம் செய்து வருகின்றார். தமிழர்களின் மனிதாபிமானத்தை இப்போதாவது முஸ்லீம்கள் புரிந்து கொள்வார்கள் என அங்குள்ள தமிழ் மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் சாதாரண முஸ்லீம் மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல என்பதை புரிந்து கொள்வதற்கு இச்செயல் உதாரணமாக அமைந்துள்ளது. ■

## கடந்த 4 மாதத்தில் ஆயிரம் பேர் வரை

# நாய்க்கடிக்கு இலக்காயினர்

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரையில் யாழ் குடாப் பகுதி வைத்தியசாலைகளில் வீட்டு நாய்களாலும் கட்டாக்காலி நாய்களாலும் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கடியுண்டனர். இவர்களில் [illegible] பேர் வரையில் வெறி நாய்க் கடிக்குள்ளாயிருக்கின்றனர். வெறி நாய்க் கடியால் நால்வர் பலியாகியுள்ளனர்.

யாழ் போதனா வைத்தியசாலையில் மட்டும் நான்கு மாதத்தில் [illegible] பேர் நாய்க்கடிக்குள்ளாகி சிகிச்சை பெற்றிருக்கின்றனர். இவர்களில் [illegible] பேர் வெறி நாய்க்கடிக்குள்ளாகி சிகிச்சை பெற்றதுடன் வெறி நாய்க்கடித் தடுப்பூசி மருந்தினை ஏற்றியுள்ளனர். ■

# இலட்சியப் பயணத்தில் இழப்புக்கள் உறுதிக்கு உரமாகின்றன.

**தளபதி ராம்**

கடந்த மாவீரர் தினத்தை முன்விட்டு விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறைப் பிராந்தியத் தளபதி ராம் அவர்கள் விடுத்துள்ள செய்தியில்:

'எமது பிராந்தியம் மிகவும் சிக்கலான புவியியல் சூழலினால் அமையப் பெற்றது. முழுமையாக சிங்கள ஆக்கிரமிப்பினால் சூழப்பட்டுள்ள இப்பிரதேசத்தில் எமது போராளிகளின் வீரத்தினால் சிங்கள இனவெறிப் படையினர் நிலை குலைந்துள்ளனர்.

எமது போராளிகள் ஒவ்வொருவரினதும் இழப்பும் இலட்சியத்தை வென்றெடுக்கும் உறுதி மிக்க போராட்டத்திற்கு உரமாக அமைகின்றன.

எமது பிராந்தியத்தில் அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இன்று மிகவும் துயரமான நிலையில் வாழ்கின்றனர். இந்த மக்களுக்கு சிங்களவர்களாலும் முஸ்லீம்களாலும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

தொழில் செய்ய முடியாத நிலையில் கூண்டுக்குள் அடைக்கப்பட்டவர்கள் போல இன்று வாழ்கின்றனர். இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் சிறுபான்மையினராக வாழ்வதினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனை ஏற்படுத்தியதும் சிங்கள அரசே.

எனவே எமது மக்கள் விடுவிக்கப்பட வேண்டுமோனால் ஆயுதப் போராட்டம் ஒன்றினால்த் தான் அது சாத்தியமாகும். சிங்கள அரசியல்வாதிகளின் நிலைப்பாடு இதனை எமக்கு உறுதியாக தெளிவுபடுத்துகின்றது என்பதை எமது மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்'. இவ்வாறு ராம் அவர்கள் தெரிவிக்கின்றார். ■

# பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் 28 ஆயிரம் விண்ணப்பங்கள் எழுதி பூர்த்தியாக்கப்பட்டன.

## மாவீரர் வாரத்தில் நடைபெற்றது

யாழ் பிறப்பு - இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் தேங்கிக் கிடந்த 28 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிறப்பு, இறப்பு மற்றும் திருமண அத்தாட்சிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் மாவீரர் வாரத்தின்போது எழுதிப் பூர்த்தியாக்கப்பட்டன.

மாவீரர் வாரத்தில் இடம்பெற்ற சிரமதான நிகழ்வின் ஓர் அங்கமாக இது இடம்பெற்றது.

யாழ் செயலகத்தின் பிரிவுகளில் கடமைபுரியும் எழுதுநர்கள், சிற்றூழியர்கள் ஆகியோரும் இதில் ஈடுபட்டனர். ■

# மாவீரரின் தியாகத்தில் தமிழீழத் தேசியம் உருவாகிறது

## தலைவர் வே. பிரபாகரன்

"மாவீரர்கள் புரிந்த அற்புதமான தியாகங்களால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகிறது". இவ்வாறு தலைவர் பிரபாகரன் அவர்கள் விடுத்த மாவீரர் நாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

"உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புகளும் இங்கு, எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கிறது. சாவுக்கும் அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும், இலட்சியப் பற்றிற்கும் 'எமது மாவீரருக்கு நிகர் எவருமேயில்லை என, நான் பெருமிதத்துடன் கூறுவேன்" என்று, அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### தலைவர் பிரபாகரன் மாவீரர் நாளில் ஆற்றிய வானொலி உரையின் முழு விபரம் •



**எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே !**

இன்று மாவீரர் தினம்.

எமது விடுதலைப் போராட்டத்தை ஒப்பற்ற வீரகாவியமாக உலக வரலாற்றில் பொறித்துச் சென்ற உன்னதமானவர்களை, நாம் நினைவில் நிறுத்திப் பூசிக்கும் புனித நாள்.

மாவீரர்கள் மகத்தான இலட்சியவாதிகள். தாம் தழுவிக் கொண்ட இலட்சியத்தை தமது உயிரிலும் மேலாக நேசித்தவர்கள். மக்களின் விடுதலையைத் தமது மானசீக இலட்சியமாக, வாழ்வின் உயரிய குறிக்கோளாக வரித்துக்கொண்டவர்கள். அந்த இலட்சியத்திற்காகவே மடிந்தவர்கள்.

மனித வாழ்வில் சுதந்திரம் உன்னதமானது. மனித நற்பண்புகளில் தலைசிறந்தது. மனித வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆதாரமானது. சுதந்திரம்தான் மனித வாழ்விற்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது. முழுமையைக் கொடுக்கிறது.

மனித ஆன்மாவின் ஆழமான அபிலாசையாகவே மனிதனிடம் சுதந்திர தாகம் பிறக்கிறது.

நாகரீகம் தோன்றிய காலந்தொட்டு, யுகம் யுகமாக மனித குலம் சுதந்திரம் வேண்டிப் போராடி வருகிறது. அடிமைத் தளைகளிலிருந்து, அடக்குமுறையிலிருந்து விடுதலை பெறவிழைந்து வருகிறது. காலம் காலமாக இந்தப் பூமியில் நிகழ்ந்த போராட்டங்கள், புரட்சிகள், யுத்தங்கள் எல்லாம் மனித விடுதலை எழுச்சியின் வெளிப்பாடுகளன்றி வேறொன்றுமல்ல.

மனிதனை மனிதன் அடிமை கொள்கிறான்; அழிக்க முயல்கிறான். மனிதனை மனிதன் சுரண்டி வாழ்கிறான். அன்று தொட்டு இன்றுவரை மனிதனே மனிதனின் முதன்மையான எதிரியாக விளங்கி வருகிறான்.

ஒருவனது சுதந்திரத்தை இன்னொருவன் விழுங்கிவிட எத்தனிக்கும்போது, தர்மம் செத்துவிடுகிறது. உலகில் அதர்மமும் அநீதியும் பிறக்கிறது. சாதி என்றும், வர்க்கம் என்றும், இனம் என்றும் பிளவுகள் எழுந்து மனிதரிடையே முரண்பாடு தோன்றுகிறது; மோதல்கள் வெடிக்கின்றன. இந்த உலகில் அநீதியும் அடிமைத்தனமும் இருக்கும் வரை, சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும்வரை, விடுதலைப் போராட்டங்களும் இருக்கத்தான் செய்யும். இது தவிர்க்கமுடியாத வரலாற்று நியதி. ஏனெனில் சுதந்திர எழுச்சியின் உந்துதலால்தான் மனித வரலாற்றுச் சக்கரமும் சுழல்கிறது.

ஒடுக்கப்படும் உலக மக்களில் ஒரு பிரிவினராக நாமும் சுதந்திரம் வேண்டிப் போராடி வருகின்றோம். எல்லா விடுதலைப் போராட்டங்களையும் விட எமது போர்க்குரல் இன்று உலகரங்கில் மிகப் பெரிதாக ஒலிக்கின்றது. எமது சுதந்திரப்போர் ஏனைய விடுதலைப் போராட்டங்களைவிட சாராம்சத்தில் வித்தியாசமானது. தனக்கே உரித்தான தனித்துவத்தைக் கொண்டது. ஒப்பற்ற சிறப்பம்சங்களைக் கொண்டது.

உலக வரலாற்றில் எங்கும், எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புக்களும் இங்கு, எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றது. சாவுக்கும் அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும், இலட்சியப் பற்றுக்கும் எமது மாவீரருக்கு நிகர் எவருமே இல்லையென நான் பெருமிதத்துடன் கூறுவேன். இப்படியானதொரு மகிமையும் மேன்மையும் வாய்ந்த மகத்தான வீரகாவியத்தை எமது மாவீரர்கள் படைத்துச் சென்றிருக்கிறார்கள். எமது மாவீரர்களின் இந்த ஒப்பற்ற சாதனைகளால், ஒடுக்கப்படும் உலகிற்கு எமது போராட்டம் ஒரு உந்து சக்தியாக, ஒரு முன் உதாரணமாக, ஒரு வழிகாட்டியாக திகழ்கிறது.

எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கிறது. சாவுக்கு அஞ்சாத அவர்களது துணிவும், உறுதிப்பாடுமே எமது போராட்டத்தின் பலமும் வளமும் ஆகும். எமது எதிரிக்கு உலகம் ஆயுதத்தையும் பணத்தையும் வாரி வழங்குகிறது. நாம் உலகத்திடம் கைநீட்டி நிற்கவில்லை. எவரிடமும் தங்கி நிற்கவில்லை. நாம் எமது சொந்த மண்ணில், எமது சொந்தக் காலில் தங்கி நிற்கிறோம். எமது சொந்தக் கைகளால் போராடுகிறோம். இதுவே எமது தனித்துவத்தின் தனிச்சிறப்பாகும். எமது சொந்தப் பலத்தில் நாம் வேரூன்றி நிலையாக நிற்பதால், மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்து கொடாமல் எம்மால் தலை நிமிர்ந்து நிற்கமுடிகிறது.

புதிய சவால்களும், புதிய நெருக்கடிகளும் நிறைந்ததாக இன்று எமது தேசிய விடுதலைப் போராட்டம் மிகவும் சிக்கலான வரலாற்றுச் சூழ்நிலையை எதிர்கொண்டு நிற்கிறது.

சமாதானத்தின் கதவுகளை இறுக மூடிவிட்டு போரை விரிவாக்கம் செய்வதில், எதிரி தீவிர அக்கறை காட்டி வருகிறான். தமிழரின் தேசிய பிரச்சனைக்கு எந்த உருப்படியான தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்க அரசு தயாராக இல்லை.

இவ்வாண்டு, என்றுமில்லாத வகையில் யுத்தம் முனைப்புற்று உக்கிரமடைந்தது. எதிரியின் படையெடுப்புத் திட்டங்களை முறியடிக்கும் வகையில் நாம் புதிய போர்த் தந்திரோபாயங்களை வகுத்து தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினோம். இதனால், என்றுமில்லாதவாறு எதிரி களத்தில் இரத்தம் சிந்தினான். வரலாற்றில் நிகழாத பாரிய இழப்புக்களைச் சந்தித்தான். ஆக்கிரமிப்பாளர்களின் கைகளை இத்தமண் ஒருபொழுதும் காத்து கொள்ளாது என்பதை எதிரிக்கு நாம் நன்கு உணர்த்திக்காட்டினோம்.

போர் முனையில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டபோதும் போரின் விளைவால் பொருளாதாரம் சீர்குலைந்தபோதும் போரில் புலிகளை வெற்றி கொள்ள முடியாது என உணர்ந்துகொண்டபோதும், போர் அணுகுமுறையை கைவிட சிங்கள அரசு தயாராக இல்லை. ஆயுதப்படைகளைப் பலப்படுத்தி, ஆக்கிரமிப்பு யுத்தத்தை தீவிரப்படுத்தி, இராணுவத் தீர்வை முன்னெடுப்பதிலேயே அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

இதிலிருந்து நாம் ஒன்றைத் தெட்டத்தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். அதாவது ஆயுதபலத்தால் தமிழினத்தை அடக்கிஆள வேண்டுமென்ற சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஆதிக்க மனோநிலையில் சிறிதளவேனும் மாற்றம் எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. இனத்துவேச அரசியல் சேற்றில் சிங்கள தேசம் மூழ்கிக் கிடக்கும்வரை, தமிழரின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு நீதியான நியாயமான அரசியல் தீர்வை நாம் சிங்கள ஆளும் வர்க்கத்திடமிருந்து எதிர்பார்க்க முடியாது. இந்தக் கசப்பான உண்மையை எமது மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

நீண்டதாக, மிகவும் கடினமானதாக, நெருக்கடிகளும் சோதனைகளும் நிறைந்ததாக, எமது விடுதலைப் பயணம் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்கிறது. காந்திய மென்வழிப் போராட்டத்திலிருந்து ஆயுத எதிர்ப்பு இயக்கம் வரை இத்தனை காலமாக எத்தனையோ வழிகளில் நீதிகேட்டு நியாயம் கோரி நாம் எழுப்பிய உரிமைக் குரல் சிங்களத் தேசத்தின் மனச்சாட்சியை தொட்டதாகத் தெரியவில்லை.

காலம் காலமாக எமது மக்கள் அனுபவித்த அவலங்கள், சாவும் அழிவுமாக அவர்கள் சந்தித்த அனர்த்தங்கள், சோகத்தின் சுமையால் அவர்கள் சிந்திய இரத்தக்கண்ணீர் இவையெல்லாம் பௌத்த தேசத்தின் காருண்ணியத்தை தொட்டதாகத் தெரியவில்லை.

எதிரி ஈவிரக்கம் அற்றவன். போர் வெறி கொண்டவன். எமது தாயகத்தைச் சிதைத்து, எமது இனத்தை அழித்துவிடுவதையே இலட்சியமாகக் கொண்டவன். அவனது இதயக் கதவுகள் திறந்து எமக்கு நீதி கிடைக்குமென நாம் எதிர்பார்க்கமுடியாது.

இந்தச் சூழ்நிலையில் நாம் என்ன செய்வது?

நாம் தொடர்ந்து போராடுவதைத் தவிர, தொடர்ந்து எமது போராட்டத்தைத் தீவிரமாக்குவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

நாம் வன்முறை மீது மோகம் கொண்ட போர் வெறியர்கள் அல்லர். நாம் உண்மையில் ஆத்ம ரீதியாக சமாதானத்தையே விரும்புகிறோம். ஒரு நிரந்தரமான, நிம்மதியான, கௌரவமான சமாதானத்தையே விரும்புகிறோம். அதனால்தான் இந்தக் கொடூரமான போரின் மத்தியிலும், சமாதானத்தின் கதவுகளை நாம் திறந்து வைத்திருக்கின்றோம். சமாதானத்தின் பாதையை நாம் மூடிவிடவில்லை. அப்படி மூடிவிடும் நோக்கமும் எமக்கில்லை. ஏனென்றால், சமாதானத்தை அடையத்தக்கவே நாம் போராடுகின்றோம். என்றோ ஒரு நாள் எதிரியானவன் எமது சமாதானக் கதவுகளை நாடுவானாக இருந்தால், நாம் எமது நேசக்கரங்களை நீட்டத் தயாராகவே இருக்கின்றோம்.

ஆனால், எமது எதிரியோ வன்முறை மீது காதல் கொண்டவன். அதனால், அன்றிலிருந்து இன்றுவரை ஒரு அநியாயமான யுத்தத்தை எம்மீது திணித்து வருகின்றான். இன்று எதிரியின் படையணிகள் எமது வாசல்களை வந்து போர் முரசு கொட்டுகின்றன. எம்மை அழித்துவிடுவதற்கும், எமது மண்ணை விழுங்கிவிடுவதற்கும் கங்கணம் கட்டி நிற்கின்றன. இந்த இன அழிப்பு யுத்தத்திற்காக எந்த அளவிற்கும் இரத்தம் சிந்த எதிரி தயாராக இருக்கிறான்.

இந்த இக்கட்டான நெருக்கடியான சூழ்நிலையில் நாம் என்ன செய்வது? போராடி எமது மக்களையும், எமது மண்ணையும் பாதுகாத்துக் கொள்வதைத் தவிர எமக்கு வேறு வழி ஏதாவது உண்டா?

போராடித்தான் நாம் சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும். சுதந்திரம் என்பது பேரம் பேசிப் பெற்றுக் கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டமல்ல. அது இரத்தம் சிந்திப் பெற்றுக்கொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.

நாம் தொடர்ந்து போராடுவோம். எத்தனை இடர் வரினும், எத்தனை துயர் வரினும் நாம் எமது விடுதலை நோக்கிய பயணத்தை தொடர்வோம்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ...

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# விடுதலைக்கு விறகான

# ஒரு குடும்ப விருட்சம்

இந்தியர்களும், இந்தியக் கூலிகளும் அம்மாவின் வீட்டிற்குள் அடிக்கடி பாய்வார்கள் - நெடுமாறனையும் அவனது சகோதரர்களையும் தேடி.....

நெடுமாறன் அம்மாவின் ஏழாவது பிள்ளை; அவன்தான் கடைசி.

"நெடுமாறன் இங்கு வாறதில்லையா..... நேற்று வந்து எங்கட ஒரு ஆளையும் போட்டிட்டான்......"

"அம்மாவில அன்பிருந்தா மோன் அடிக்கடி வீட்டை வருவான் தானே...."

அம்மாவையும், அக்காவையும் அவர்கள் அடிக்கடி வந்து உறுக்கிப்பார்ப்பார்கள். அப்போதெல்லாம் அக்கா அவர்களுக்குச் சூடாகவே பதில் சொல்லி அனுப்புவாள். இது அம்மா கொடுத்து வளர்த்த உறுதி - துணிவு. ஆனால், அம்மா அமைதியானவள். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு அமைதியாக பேசாமல் இருப்பாள். அவளது மனம் புழுங்கிக் கொண்டிருக்கும்.

வழமைபோல அன்றும் அவர்கள் வந்தார்கள். அம்மா வாசலில் இருந்தாள், அருகில் அக்கா. வீட்டுக்குள்ளே அக்காவின் பிள்ளைகள். அவர்கள் படலையைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார்கள்...

"நேற்று மாவிட்டபுரத்தில உன்ர மகனைச் கட்டுப்போட்டம். உடம்பு இருக்கு வந்து எடு....." ஒருவன் வெற்றிக் களிப்போடு உறுமினான். தலையில் இடி விழுந்தது போல இருந்தது அம்மாவுக்கு. அக்கா அதிர்ந்துபோனாள். அக்காவின் பிள்ளைகள் .... அழுது குழறினார்கள். ஊர் அழுதது. ஆனால் அம்மா மௌனமாகவே இருந்தாள். அவளால் அழ முடியவில்லை. அவள் அழமாட்டாள், இழப்புகளால் உறுதியான தாய்.

"எங்கட வீட்டிலதானே ஒரு ஆம்பிளையளையும் நீங்கள் இல்லாமல் செய்து போட்டியள்.... வந்தெடுக்கிறதுக்கு இங்க ஆக்கள் இல்ல...." கண்ணீரோடு ஆனால் கடுமையாக அக்கா கூறி முடித்தபோது, அவர்கள் போய்விட்டார்கள்.

அக்கா அம்மாவின் இரண்டாவது பிள்ளை. ஆறு ஆண் சகோதரர்களுக்கு ஒரே ஒரு பெண் பிள்ளை. நெடுமாறனைக் கட்டிலில் படுக்கவைத்திருந்தார்கள். அருகில் கதிரையில் இருந்து தன் வீர மகனின் உடலை கண் வெட்டாமல் அம்மா பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் அழவில்லை. பிள்ளைகள் போராட்டத்தோடு கலந்தபோது, அவர்கள் பிணமாகத்தான் வருவார்கள் என்பதை, அம்மா தெரிந்திருந்தாள்.

* * * * *

11.08.1984 - கன்னாகம். ஊரிலிருந்த மக்களைப் பிடித்து வந்து காவல் நிலையத்தினுள் அடைத்து வாசல் கதவுடன் வெடிகுண்டை இணைத்துவிட்டு சிங்களப்படையினர் போய்விட்டனர்.

செய்தியை அறிந்த புலிகள் மக்களை மீட்பதற்காக அங்கு விரைந்தனர். சஞ்சீவியும் இம்பிராஜனும் நிக்கியும் இன்னும் சில தோழர்களும், வாசல் கதவிற்குப் பின்னாலிருந்த வெடிகுண்டின் அபாயத்தைத் தெரிந்திருக்காத நிலையில் உள்ளே புகமுயன்றபோது அந்தத் துயரம் நிகழ்ந்தது. அந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட மக்களுடன், சஞ்சீவியும், நிக்கியும் வீரச்சாவை அணைத்துக்கொண்டார்கள்.




"நான் உங்கட கையால சாப்பிட்டிருக்கிறனம்மா"

சிதைந்துபோன சஞ்சீவியின் உடலை சேர்த்து எடுத்து ஒன்றாக்கி, அம்மாவிடம் கொண்டு வந்தனர் தோழர்கள். தனது செல்வங்களில் ஒன்றை அம்மா முதலில் இழந்து விட்டாள். அம்மா அழுதாள். அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவன்தான் அம்மாவின் செல்லப்பிள்ளை. சஞ்சீவியின் அக்கா கதறினாள். உடன் பிறந்தவர்கள், உறவினர்கள், சுற்றத்தார், தோழர்கள் எல்லோருமே துயரைத் தாங்கிய விழிகளில் கண்ணீரோடு நின்றார்கள்.


1982, 83 காலங்களில் இயக்கத்தோடு தொடர்புகளை ஏற்ப



பதுமநிதி
(சிறிதரன் சுபாஜினி)
பிறப்பு: 04-10-1974
வீரச்சாவு: 08-08-1991



சோதி அண்ணன்
(வைத்திலிங்கம் பரமநாதன்)
தோற்றம்: 19-02-1949
மறைவு : 01-10-1988



சஞ்சீவி
(வைத்திலிங்கம் மகேசநாதன்)
பிறப்பு: 01-06-1960
வீரச்சாவு : 11-08-1984



கப்டன் நெடுமாறன்
(வைத்திலிங்கம் கணேசநாதன்)
பிறப்பு: 17-01-1964
வீரச்சாவு : 30-08-1989

டுத்தி, விடுதலைப்பணியை ஆற்றத் துவங்கினான் சஞ்சீவி.

ஒருநாள் அம்மாவிடம் சொன்னான். "ஆறு ஆம்பிளையள் இருக்கிறமம்மா.... ஒரு ஆள் எண்டாலும் போராடப் போகலாம்தானே...." என்று. அம்மா ஏற்றுக்கொள்ள முடியாமலும், ஆனால் மறுக்காமலும் சமாளித்துக்கொண்டாள்.

83 ஜூலை நிகழ்வுகளுக்குப் பின் இயக்கத்தில் முழுநேர உறுப்பினராக இணைந்து புலிகளின் இரண்டாவது பயிற்சிப் பிரிவில் பயிற்சிபெற்றான்.

சஞ்சீவி, அம்மாவின் ஆறாவது பிள்ளை நெடுமாறனுக்கு நேரே மூத்தவன். அண்ணனின் உடலைக்கண்டபோது, அண்ணன் மரணித்த அதே இலட்சியத்திற்காக தானும் போராடுவேன் என்ற உறுதியுடன் தான், நெடுமாறன் போராடப் புறப்பட்டான்.

இயக்கத்தின் ஆறாவது பயிற்சிப் பிரிவில் பயிற்சியை முடித்த நெடுமாறன், கடற்புலிகள் பிரிவில் சேர்க்கப்பட்டான். கடற்சண்டைகளுக்கான அடிப்படைப் பயிற்சிகளை வழங்குவதற்கென உருவாக்கப்பட்ட முதலாவது குழுவில் ஒருவனாக இருந்து கடற்புலிகளின் முதலாவது பயிற்சிப் பிரிவில் பயிற்சி பெற்றான். சிங்களப் படைகளுக்கும் இந்தியப்படைகளுக்கும் எதிரான போர்களின்போது பல முக்கியமான களங்களில், ஒரு முன்னணிச் சண்டைக்காரனாக நெடுமாறன் இருந்திருக்கின்றான்.

மயிலிட்டிப் பகுதியில், இந்தியர்களும் ஊர்காவற்படைகளும் நிலைகொண்டிருந்த சுமார் பத்து முகாம்களுக்கு நடுவில், அவன் புயலாக வீசினான். இந்தியப்படையினரையும், அவர்களுக்குத் துணைபோய் தேசத்திற்குத் துரோகம் இழைத்தவர்களையும் அவனது துப்பாக்கி தண்டித்தது.

30.08.1989 அன்று மாவிட்டபுரத்தில் நடந்த ஒரு வெற்றிகரமான தாக்குதலின்போது கப்டன் நெடுமாறன் எம்மைப் பிரிந்தான்.

* * *

ஒருவர் அல்லது இருவர் போராளியாக இருக்கின்ற குடும்பங்களை நாம் பார்க்கின்றோம். எமது தேசத்தின் எல்லா இடங்களிலும், இவ்வாறான குடும்பங்களை நாம் பார்க்கமுடியும். ஆனால், ஒரு குடும்பமே போராளிகளாக நிற்கின்ற நிகழ்வுகளை, சில இடங்களில் மட்டுமே நாம் காணமுடியும். அவ்வாறான குடும்பங்களில் ஒன்று தான் அம்மாவின் குடும்பம். அம்மா, தன் பிள்ளைகளுக்கு தாய்ப்பாலோடு வீரத்தையும், துணிவையும் ஊட்டித்தான் வளர்த்திருக்கின்றாள். தேசப்பற்றையும், விடுதலை உணர்வையும் அவர்களுக்கு அம்மா கொடுத்தாள். ஆனாலும் எல்லாத் தாய்மார்களுக்கு இருக்கும் இயல்பைப் போலவே, சஞ்சீவியும், நெடுமாறனும் போராடப் புறப்பட்டபோது அம்மாவின் மனம் கவலை கொண்டது. அழுதும் கூட இருக்கின்றாள். ஆனால், அம்மா தடுக்கவில்லை. திரும்பி வாங்கோ என்று கேட்கவில்லை.

சோதி அண்ணன், அம்மாவின் மூன்றாவது பிள்ளை. இந்தியப் படை வளைத்து நின்ற நாட்களில் புலிகளின் தகவல் தொடர்பாளராகச் செயற்பட்டார். யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பகுதிக்குச் சென்று வந்து புலிகளுக்கிடையில் முக்கியமான தகவல்களைப் பரிமாறினார்.

புலிகளின் உற்ற துணையாக நின்று இவர் செயற்படுகின்றார் என்பது துரோகிகளுக்குத் தெரிந்திருந்தது. இந்த விடயம் அவர்களுக்குத் தெரியும் என்பது சோதி அண்ணனுக்கும் தெரிந்திருந்தது. ஆனாலும் அவர் துணிவோடு இயங்கினார்.

01.10.1988 அன்று, சோதி அண்ணனின் வீடு.

சாவு அவரின் கதவைத் தட்டியது.

"சோதி அண்ணை .... சோதி அண்ணை ...."

'எங்கட பொடியள் போகக்கிடக்கு' என்று தனக்குள் எண்ணிக்கொண்டு, "ஆரது தம்பி .... உள்ளுக்கை வாங்கோவன் ..." என்றபடி படலையை எட்டிப்பார்த்தார். அதிர்ந்தார். நெஞ்சு விறைத்தது. அவர்கள் உள்ளே நுழைந்தார்கள்.

"அண்ணை உங்களில் ஒரு விசாரணை .... எங்களோட வாங்கோ; திருப்பிக் கொண்டு வந்து விடுறம்" ஒரு தாடிக்காறன் சொன்னான். மனைவி ஓடிவந்து தடுத்தாள், கதறினாள். பிள்ளைகள் அழுதார்கள். ஆனாலும் அவர்கள் கூட்டிச் சென்றார்கள்.

சில மணித்துளிகள் கழிந்தன. நடு வீதியிலேயே துப்பாக்கி வேட்டோசை ஊரெங்கும் எதிரொலித்தது.

* * *

அம்மாவின் நாலாவது பிள்ளை குட்டி அண்ணன், புலிகளோடு சேர்ந்து நின்றதால் இந்தியப்படையும், துரோகிகளும் அவரைக் குறிபார்த்துத் திரிந்தார்கள். அடிக்கடி அவரின் வீட்டுக்குப் போனார்கள். கேள்விகளால் துளைத்தார்கள். அவர்களின் தொடர்ச்சியான தொல்லைகள், அவருக்கு ஏற்கனவே இருந்த இருதய நோயை இன்னும் அதிகரித்தது. ஒருநாள் கடலில் தொழிலுக்குப் போன குட்டி அண்ணனுக்கு மாரடைப்பு வந்தது. அம்மாவிடமிருந்தும், எம்மிடமிருந்தும் பிரிந்து விட்டது. இப்போது குட்டி அண்ணனின் மகன் துப்பாக்கியோடு களத்தில் நிற்கிறான்.

* * *

அக்காவின் கணவர் சிறீதரன், இந்தியப் படையினரும் கூடித்திரிந்த கும்பல்களும் அவரை அடிக்கடி பிடித்துச் சென்றார்கள். அப்போதெல்லாம் அவர்களது இரும்புக் கம்பிகளும் என்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# புலம்பெயர்ந்த தமிழரி



இலண்டனில் நடைபெற்ற மாவீரர்தின நிகழ்ச்சியை மாவீரரின் தாயார் ஒருவர் குத்துவிளக்கேற்றி தொடக்கி வைக்கிறார்.



பாரிசில் மாவீரரின் நினைவால




ஜேர்மன் மாவீரர் தினத்தில் நாச்சிமார் கோவிலடி ராஜன் குழுவினரின் 'ஈழ காவியம்' வில்லிசை

தமிழ்ஈழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



சிட்னியில் மாவீரர் தின நிகழ்ச்சி
அவர்களின் தாயார் பெற்றி
ஆரம்பித்து வைக்கிறார்.



நோர்வே ஒஸ்லோ நகர மாவீரர் தின விழாவில் 'போரென்று படை கொண்டு வந்தாயா' நாட்டிய நிகழ்ச்சி



மெல்பொர்னில் மாவீரர்களின்
அஞ்சலிக்கின்றனர்.

# டை மாவீரர் நினைவு



...த்தில் ஒரு தாயின் அஞ்சலி



இலண்டன் மாவீரர் நினைத்தில் எழுதுமை நாதம் நாடகத்தில் இரு காட்சிகள்



...னை திருமதி அடேல் பாலசிங்கம் ...விளைவ மங்கள விளக்கேற்றி



மெல்போர்னில் 'என்னுயிர் உனக்காக' என்னும் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் மாவீரர் ஒருவரின் இறுதிச் சடங்கு [illegible] தத்ரூபமாக சித்தரிக்கப்பட்டது

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



...பெற்றோர் உற்றோர் தீபமேற்றி



ஜேர்மனியில் நடைபெற்ற 'தமிழன் கனவு' நாட்டிய நாடகம்

# பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்

— அடேல் ஆன்

ஆணாதிக்க உலகம் பெண்கள் மீது இழைத்து வரும் இம்சைகளில் ஒன்றுதான் பாலியல் துன்புறுத்தல் (SEXUAL HARASSMENT). இது எல்லாக் காலங்களிலும் எல்லாச் சமூகங்களிலும், உலக ரீதியாக பெண்கள் எதிர்கொள்ளும் ஒரு சிக்கலான மானப்பிரச்சனை. பாலியல் துன்புறுத்தலானது பல்வேறு சூழ்நிலைகளில், பல்வேறு வடிவங்களில், பல்வேறு முறைகளில் நடைபெறுவதால் இதற்கு ஒரு திட்டவட்டமான வரைவிலக்கணம் கொடுப்பது கடினம்.

ஆபாச வார்த்தைகளால் அல்லது செயல்களினால் பெண்களை இழிவு படுத்துதல் பெண்களைச் சீண்டுதல், அங்க சேட்டை செய்தல், பண்பற்ற பகிடிகள் விடுதல் இப்படியான செயற்பாடுகளை, நடத்தைகளை பாலியல் துன்புறுத்தலுக்குச் சில உதாரணங்களாகக் கொள்ளலாம்.

எந்த முறையில், எந்த வடிவத்தில், எந்த சூழ்நிலையில் இந்தச் செயல்கள் இடம் பெற்றாலும் ஒன்றைமட்டும் உறுதியாகச் சொல்லலாம். அதாவது இந்த இழி செயல்கள் பெண்களை இம்சைப்படுத்துகிறது; அவமானப் படுத்துகிறது; மிகவும் சங்கடமான நிலைக்கு தள்ளி விடுகிறது. இது பெண்களைத் துன்புறுத்தும் செயல் என்பதில் சந்தேகமில்லை.

ஆண்கள், பெண்களைக் கவர்ந்திழுப்பதற்காகக் கையாளும் கபடமற்ற காதல் சமிக்ஞைகளாக இவற்றைக் கொள்ள முடியாது. ஏனென்றால் இச் செயல்கள் பெண்ணின் எதிர்ப்புக்கும் ஆட்சேபனைக்கும் மத்தியில் தொடர்ந்து இடம்பெறுவதோடு பெண்மையின் கௌரவத்தை இழிவு படுத்தும் நோக்குடையதாகவும் அமைகிறது.

பெண்களை இம்சைப்படுத்தும் இந்தப் பாலியல் துன்புறுத்தல்கள் ஆணாதிக்க மனோநிலையின் விரசமான வெளிப்பாடுகள் என்பதில் சந்தேகமேயில்லை. மற்றவர்களது உணர்வை மதிக்காது அவர்கள் மீது ஆதிக்கத்தைச் செலுத்தும் அதிகாரத்தன்மையையும் பண்பற்ற குரூரத்தனத்தையும் இச் செயல்கள் வெளிக்காட்டத் தவறவில்லை.

ஆணாதிக்க மனோபாவம் கொண்ட இந்த இழிநடத்தையை ஆண்களின் இயல்பான பண்பு

> பதவியில் இருக்கும் ஒருவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்திப் பாலியல் இச்சைகளைத் திருப்திப்படுத்த முயலுவாராக இருந்தால் அது தண்டனைக்குரிய குற்றம் எனப் பிரஞ்சுச் சட்டம் சொல்கிறது.

எனவும் 'ஆண்மையின் வெளிப்பாடு' எனவும் பலர் தவறாகக் கருதுவதுண்டு. பெண்களைத் தம்பால் கவர்ந்திழுக்கவும், ஆண்-பெண் உறவை மலரவைக்கவும் ஆணினம் இந்தச் செயல்களில் ஈடுபடுவது இயற்கையானதும், தவிர்க்க முடியாததெனவும் வேறுசிலர் வாதாடுவதுண்டு. இத்தகைய ஆணாதிக்க எண்ணப்பாடுகள் சமூகக் கருத்துலகில் ஆதிக்கம் செலுத்துவதால் பெண்ணினத்தை எதிர்கொள்ளும் இச்சிக்கலான பிரச்சனை பற்றி சமூகமும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. இது மிகவும் துரதிஷ்டவசமானதாகும்.

பெண்களைத் துன்புறுத்தும், அவமானப்படுத்தும் இந்த இழி செயல்களை 'ஆண்மையின் இயல்பான வெளிப்பாடுகள்' என யாராவது கருதுவார்களாயின், அவர்கள் பெண்களின் மன உணர்வுகளையும், தன்னாபிமானத்தையும் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் அர்த்தம்.

அடிப்படை மனித உரிமை, சுதந்திரம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பார்ப்போமானால், பெண்ணின் தனித்துவத்தில், தனிமனித உரிமையில் தலையிடும் அதிகாரத்தை ஆணுக்கு யார் கொடுத்தது என்ற கேள்வியும் எழுகிறது.

ஆணும் பெண்ணும் மானிடப் பிறவிகள். சமத்துவமான, சம உரிமை கொண்ட மனித உயிர்கள். உடற் கூட்டு ரீதியாக பெண்வடிவம் எடுத்துள்ள ஒரே காரணத்திற்காக, பெண்கள்மீது சீண்டவோ, சேட்டைகள் புரியவோ, பலவந்தம் செய்யவோ ஆண்களுக்கு எவ்வித அதிகாரமும் உரிமையும் இல்லை. எனவே, இந்த நடத்தை அறியாமையால் எழுந்த ஆணாதிக்க இறுமாப்பே தவிர வேறொன்றுமல்ல.

இன்று உலகம் முழுவதும் ஆண்களின் இத்தகைய பாலியல் துன்புறுத்தல்களுக்கு எதிராக பெண்ணினம் கடும் ஆட்சேபத்தை எழுப்பி வருகிறது. பெண்களின் எதிர்ப்பியக்கம் காரணமாக, பாலியல் துன்புறுத்தல் பல நாடுகளில் பாரதூரமான குற்றச் செயலாக சட்டவாக்கம் பெற்றிருக்கிறது. இந்தப் பிரச்சனை குறித்து சர்வதேச ரீதியாக நடைபெறும் சமூகவியல் ஆய்வுகள், நீதிமன்ற வழக்குகள், சட்ட உருவாக்கங்கள் ஆகியனவற்றைப் பார்க்கும்பொழுது ஆண்களின் இத்தகைய நடத்தைகளை பெண்ணினம் இனியும் பொறுத்துக் கொள்ள தயாராக இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

கடந்த ஆண்டு அமெரிக்காவில் ஒரு திறமைமிக்க பெண் சத்திர சிகிச்சை நிபுணர், சக ஆண் வைத்தியர்களின் பாலியல் துன்புறுத்தல்களை சகித்துக்கொள்ள முடியாது தனது பதவியைத் துறந்தார். கீழ்த்தரமான கிண்டல்கள், ஆபாசப் பகிடிகள் ஒருபுறமிருக்க, சத்திர சிகிச்சை அறைக்குள் அடிக்கடி நிகழ்ந்த சீண்டல்கள், அங்க சேட்டைகளை பொறுத்துக்கொள்ள முடியாது அப் பெண்வைத்தியர் பதவியிலிருந்து விலகியதுடன் இவ் விவகாரத்தை பத்திரிகைகள் மூலம் மக்கள் அரங்கிற்குக் கொண்டுவந்தார். இது பெரும் சர்ச்சைக்குரிய விசயமாக விமர்சனத்துக்குள்ளாகி ஆண் வைத்தியர்களின் அவதூறான நடத்தை பலத்த கண்டனத்துக்கு ஆளாகியது. இறுதியில் வைத்திய நிர்வாகப் பீடம் பகிரங்க மன்னிப்பு கேட்டுக்கொண்டதை அடுத்து அப் பெண் வைத்தியர் மீண்டும் பதவியை ஏற்றுக்கொண்டார்.

பாலியல் துன்புறுத்தல் தொடர்பாக சமீபத்தில் அமெரிக்காவில் நடைபெற்ற வழக்கொன்று முழு உலகத்தினதும் கவனத்தை ஈர்த்துக் கொண்டது. அமெரிக்க உயர் நீதிமன்ற நீதியரசராக நியமனம் பெற இருந்த கிளாரன்ஸ் தோமஸ் எனப்படும் 'பெரிய மனிதர்' மீது இவ் வழக்குத் தொடரப்பட்டது. 43 வயதான இவர் திருமணமாகியவர். இந்த நீதியரசருக்கு எதிராக சக வழக்கறிஞரும், சட்டத்துறை பேராசிரியையுமான அனிதா கில் என்ற பெண்மணி வழக்கைத் தொடர்ந்தார். அமெரிக்க செனட்டின் சட்ட விசாரணைக் குழுவின் முன்னிலையில் விசாரிக்கப்பட்ட இவ் விவகாரம் நாடு முழுவதும் தொலைக்காட்சி மூலம் பகிரங்கப் படுத்தப்பட்டது.

> பெண்களைத் துன்புறுத்தும், அவமானப்படுத்தும் இந்த இழிசெயல்களை, 'ஆண்மையின் இயல்பான வெளிப்பாடுகள்' என யாராவது கருதுவார்களாயின், அவர்கள் பெண்களின் மனவுணர்வுகளையும், தன்னாபிமானத்தையும் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் அர்த்தம்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கிளாரன்ஸ் தோமஸ் எப்படித் [illegible] பாலியல் துன்புறுத்த[illegible] வெளிப்படையாக எடுத்துக் கூறினார். தோமஸ் தான் பார்த்த ஆபாசப் படங்களின் அசிங்கமான காட்சிகளை வெறுப்பூட்டும் வகையில் திரும்பத் திரும்ப வர்ணித்துக் கொண்டிருந்தார். தனது தனிப்பட்ட காதல் லீலைகளையும், பாலியல் அனுபவங்களையும் அவசியமில்லாமல் தொடர்ச்சியாகச் சொல்லிக்கொண்டிருந்தார். பெண்களின் உடலமைப்பைப்பற்றி மிகவும் கீழ்த்தரமான ஆபாசப் பகிடிகளைக் கூறினார். இப்படியான ஒரு சூழ்நிலையில் மிகவும் விரக்தியுடனும், வேதனையுடனும், அவமானத்துடனும்தான் இந்தப் பெரிய மனிதருடன் தான் வேலைசெய்ய வேண்டியிருந்ததாக அனிதா எடுத்து விளக்கினார். சட்ட விசாரணைக் குழுவில் ஆணாதிக்க மனோநிலை தாண்டவமாடியதால் பெரிய மனிதர் தண்டனை பெறாமல் தப்பித்துக்கொண்டார். அமெரிக்க உயர்நீதிமன்ற நீதியரசராக அவர் நியமனம் பெற்றபோதும் அவரது ஒழுக்கத்தின் மீது ஒரு பெரிய சந்தேகக்குறி எழுந்திருக்கிறது. அவரது நடத்தை பகிரங்க விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதால் அதிகார பீடத்திலுள்ள ஆண்கள் தாமும் பகிரங்கப்படுத்தப்பட்டு அவமானத்துக்கு ஆளாகலாம் எனப் பயப்படுகிறார்கள். இந்த வழக்கின் எதிரொலியாக அமெரிக்காவின் வேலைத்தளங்களிலும் பொது இடங்களிலும் தமது நடத்தைகளைத் திருத்திக்கொள்ள ஆண்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ் நாட்டில் இப்பொழுது பாலியல் துன்புறுத்தல் என்பது தண்டனைக்குரிய குற்றமெனச் சட்டமியற்றப்பட்டுள்ளது. அத்துடன் எவ்வகையான செயல்களைப் பாலியல் துன்புறுத்தல்கள் என அழைப்பது எனவும் சில வரையறைகளைப் பிரெஞ்சு அரசு வகுத்துள்ளது. பயமுறுத்தியோ அல்லது அதிகாரத்தைப் பயன்படுத்தியோ பெண்களுடன் பாலியல் சேட்டைகளில் ஈடுபடுவது கடுமையான குற்றமெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பதவியில் இருக்கும் அதிகாரி ஒருவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்திப் பாலியல் இச்சைகளைத் திருப்திப்படுத்த முயலுவாராக இருந்தால் அது தண்டனைக்குரிய குற்றம் எனப் பிரெஞ்சுச் சட்டம் சொல்கிறது. இத்தகைய குற்றச் செயலுக்காக ஒரு பிரபலவர்த்தக நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி ஒருவர் மூன்று மாதச் சிறைத் தண்டனையைப் பெற்றார். அதிகாரத் துஸ்பிரயோகம் மூலம் நடைபெறும் பாரதூரமான பாலியல் துன்புறுத்தல் செயல்களுக்கு பத்து வருடம்வரை சிறைத் தண்டனை விதிக்கலாமெனப் பிரெஞ்சுச் சட்டம் கூறுகிறது.

அண்மையில் ஜப்பானிலும் பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபட்ட பல ஆண்கள் அம்பலப் படுத்தப்பட்டுத் தண்டனையும் பெற்றுள்ளனர். முன்பெல்லாம் இத்தகைய பாலியல் துன்புறுத்தல்கள் நடைபெறும்பொழுது அதனை ஒரு இயல்பான ஆணாதிக்கப் பண்பாட்டுக் கோலமென நினைத்து ஜப்பானியப் பெண்கள் பொறுமையுடன் சகித்து வந்தனர். ஜப்பானின் வேலைத்தளங்களில் அல்லது பொது இடங்களில் பாலியல் துன்புறுத்தல்கள் நிகழும்பொழுது வெட்கப்பட்டுத் தலைகுனிந்து அமைதியாக அடக்கமாகச் சென்ற ஜப்பானியப் பெண்ணினம் இன்று ஆணாதிக்க வன்முறைக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தத் தொடங்கியுள்ளது. ஜப்பானியப் பெண்களை விழிப்புக் கொள்ளச் செய்வதற்கு ஒரு பாலியல் வன்முறைச் சம்பவம் காரணமாக அமைந்துள்ளது.

ஒரு ஜப்பானிய வர்த்தக நிறுவனத்தில் காரியதரிசியாக வேலை செய்துவந்த ஒரு இளம் பெண் அந்த நிறுவன அதிகாரியின் பாலியல் துன்புறுத்தலுக்குத் தொடர்ச்சியாக ஆளாகிவந்தார். ஆண்களின் இயல்பான போக்கு என எண்ணி இந்த அதிகாரியின் நடத்தையை இப் பெண் மிகவும் பொறுமையுடன் வேதனையுடன் சகித்துவந்தார். [illegible] ஆட்சேபித்து எதிர்ப்புத் தெரிவித்தால் வேலை பறிபோய்விடும் என்ற பயத்தில் மௌனமாகப் பொறுத்து வந்தார். ஆயினும் ஒரு நாள் இந்தப் பாலியல் சேட்டைகள் வரம்பு மீறிச் சம்பவமாக மாறியது. அந்தப் பெண் பலாத்காரமாக மிருகத்தனமாகப் பாலியல் வன்முறைக்கு ஆளாகியது மட்டுமன்றி கர்ப்பிணியும் ஆக்கப்பட்டார். இதனால் ஆவேசமடைந்த அந்தப் பெண் அந்த அதிகாரிமீது வழக்கைத் தாக்கல் செய்தார்.



ஜப்பானிய மக்களின் கவனத்தைப் பெரிதாக ஈர்த்துக் கொண்ட இவ் வழக்கில் அந்த அதிகாரி குற்றவாளியாகக் காணப்பட்டு அம்பலப்படுத்தப்பட்டார். பல ஆண்டுச் சிறைத் தண்டனையும், ஜப்பானிய நட்ட ஈடாக [illegible] அபராதமும் அவருக்கு விதிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பாலியல் துன்புறுத்தலின் தாக்கம் பற்றி ஜப்பானிய பெண் சமூகம் புரிந்துகொண்டது. இதனால் துணிவடைந்த பெண்கள் முறைப்பாடுகள் செய்ய முன்வந்தனர். பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டின் பேரில் பல ஜப்பானிய ஆண்கள் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். [illegible] பல ஜப்பானிய வர்த்தக நிறுவனங்களும் பல கோடிக்கணக்கில் [illegible] பணம் செலுத்தவேண்டியிருந்தது. இதன் காரணமாக ஜப்பானிய முதலாளிகள் [illegible] தமது நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள வர்த்தக நிறுவனங்களில் பாலியல் துன்புறுத்தல்களை ஒழிக்கும் நோக்கில் பல்வேறு ஒழுங்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பாலியல் துன்புறுத்தல் பெண்களின் தனிமனித உரிமைகளை மீறுகிறது. [illegible] இந்த [illegible] காலத்துக்குக் காலம் வெளியிடப்படுகிறது.

கல்வி வளர்ச்சியும் பொருளாதார அபிவிருத்தியும் காரணமாக இன்று பல உலகநாடுகளில் பெண்கள் வேலைவாய்ப்புப் பெற்று ஆண்களுடன் சேர்ந்து தொழில் புரியும் சூழ்நிலை பெருகி வருகிறது. பெண்ணினத்தின் சுயசார்புப் பொருளாதார வாழ்வை மேம்படுத்தும் இவ்வளர்ச்சியோடு ஆண் பெண் உறவு சம்பந்தமான சிக்கலான பிரச்சனைகளும் தலைதூக்கத் தவறவில்லை. தொழிலகங்களில் பாலியல் துன்புறுத்தல் என்பது ஒரு பூதாகாரப் பிரச்சனையாகத் தோற்றம் கொண்டிருக்கிறது. இந்த ஆணாதிக்க அச்சுறுத்தலை எதிர்த்து நிற்கும் பெண்கள் பல வேறு வகையான பழிவாங்கல்

தொடர்ச்சி 16ம் பக்கம் ...

# தூய தமிழ் வழக்கும் அதன் இன்றைய தேவையும்

கலாநிதி இ. பாலசுந்தரம்

மொழி என்பது ஒரு சமுதாயத்தின் விளை பொருளாகும். ஆனால் அம்மொழிக்கு உயிருண்டு; உணர்வுண்டு; வளர்ச்சியுமுண்டு; தேவையுமுண்டு. அதன் வளர்ச்சியும் தேய்வும் அதனைப் பயன்படுத்துவோரின் பண்பாட்டுச் சீர் அமைப்புக்களிலேயே தங்கியுள்ளன. மக்கள், தம் எண்ணக் கருத்துக்களை வெளியிடுவதற்கு மட்டுமன்றி, எண்ணுவதற்கும் மொழி கருவியாகின்றது. ஒரு மொழியைப் பேசும் குறிப்பிட்ட சமூகத்தின் பல தலைமுறையினரின் எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் சொற்களஞ்சியத்தை அம் மொழி கொண்டதாக அமைந்திருக்கும். அதன் வழிப்பட்ட இலக்கியங்களும் அம்மொழி பேசும் மக்களின் வரலாற்று அடிப்படையிலான அரசியல், பொருளியல், மதம், கலை, பண்பாடு முதலான நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் சான்றுகளாகும்.

### தமிழும் வடமொழியும்

தமிழ் மக்களின் மொழி, இலக்கிய பண்பாட்டு வரலாற்றிலே வடமொழியும் அதன் வழிப்பட்ட பண்பாட்டுத் தொடர்புகளும் காலங்காலமாக மிகப்பெரிய தாக்கங்களை ஏற்படுத்தலாயின. இதன் பயனாகப் பழந்தமிழ்ச் சொற்கள் வழக்கற்றுப் போக அந்த இடத்தை வடசொற்கள் நிரப்பிக்கொண்டன. தமிழ் நாட்டை, தமிழர் வாழ்வைக் களமாகக் கொண்ட இலக்கியங்களுக்குப் பதிலாக ஆரியரின் வாழ்வியல் அவர்களது இலக்கியங்கள் என்பவற்றைத் தழுவியவையாகத் தமிழில் இலக்கியங்கள் தோன்றலாயின. அத்துடன் வடமொழி இலக்கிய ஆளுமைகள் தமிழில் ஆழமாகவும் பதிந்துகொண்டன. தமிழ்நாட்டில் வந்து சேர்ந்த அனைத்து மதங்களும் தத்தம் மத இலக்கியங்களைப் படைக்கும்போதும் வடமொழிச் சொற்களைப் பெரிதும் கையாண்டுள்ளமையும் தமிழ் மொழிக்கேற்பட்ட ஒரு வாய்ப்பின்மையாகும். ஆட்பெயர் தொடக்கம் கடவுள் பெயர் வரை, மக்கள் செயல்கள் முதல் இறைசெயல்கள் வரையிலான ஆங்கிலச் சொற்களைத் தமிழில் வழங்கும் போதும் வடமொழிச் சொல்லாகவே வழக்குப் பெற்றமையும் இன்னொரு வகையிலான இழப்பாகும். (எ-டு Paper பத்திரிகை Press முத்திராயந்திர சாலை) எனவே தமிழ்மொழி காலம் காலமாக வடமொழியின் மேலாண்மைக்கு உட்படுத்தப்பட்டு வந்தமை தெளிவாகின்றது. தமிழ் நாட்டில் 19ம் நூற்றாண்டில் ஏற்பட்ட பண்பாட்டு விழிப்புணர்வு, பிராமணிய எதிர்ப்பு, தேசிய உணர்வு, மொழியுணர்வு என்ற அடிப்படைகளின் பின்னணியில் தனித் தமிழ் இயக்கம் தோன்றுவது தவிர்க்க முடியாததாயிற்று.

### மொழித்தூய்மை பேணல்

தம்மொழியிலுள்ள பிறமொழிச் சொற்களை அகற்றி அவற்றுக்குப் பதிலாகத் தம் மொழியில் புதுச்சொற்களை ஆக்கம் செய்து வழங்கும் பெரு முயற்சியே மொழித் தூய்மை பேணல் (Language purism) ஆகும். தாய்நாடு, தாய்மொழி, நம் அரசு, நம் பண்பாடு என்னும் உணர்வுகளோடு வாழும் சமூகம், தம் மொழியைத் தூய்மையாக வழங்கவேண்டும் என்ற அடிப்படையில் உலகில் பல மொழியாளர்கள் செயற்பட்டு வந்திருக்கின்றனர். பிறமொழியாளரின் மேலாண்மை நடவடிக்கைகளினால் தம் மொழி அழிந்துவிடும் என்ற பய உணர்வினாலும் மொழித் தூய்மை இயக்கம் பல நாடுகளிலும் மேற்கொள்ளப்படுவதாயிற்று. பலமொழிகள் வழங்கும் ஒரு நாட்டில் ஆட்சியுரிமைகொண்ட மொழியாளர், அந்நாட்டில் வாழும் ஏனைய மொழிபேசும் சமூகத்தினரை அடக்கியாள முற்படும்போது, அடக்கப்படும் மொழியினர் ஒருகால் வீறு பெற்றெழுந்து தம்மொழியின் தனித் தன்மையைப் பேணும் முயற்சியிலீடுபட்ட வரலாறுகளுமுண்டு.

இத்தகு அகப் புறக்காரணிகளால் இன்று ஈழத் தமிழர்களாகிய நாம், எம் மொழியின் தூய்மை பேணப்படவேண்டியதொரு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். எமது மொழியின் தனித்தன்மை, எமது மொழியின் கலை, பண்பாட்டு விழுமியங்கள் யாவும் அழிந்துவிடக்கூடியதொரு நிலை இன்று காணப்படுகின்றது. தென்னிந்தியத் தமிழர்களது மொழியில் தூய்மை பேணப்படவில்லை. அங்குள்ள அரசியல், சமூகச் சிக்கல்கள், மொழிப்பற்றின்மை, போதிய கல்வியறிவின்மை முதலான காரணங்களால், மொழித்தூய்மை பேணப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தும், தமிழகத்தில் தமிழ் தூய்மை இழந்து காணப்படுகின்றது. ஆனால் நம் நாட்டில் அரசியல் நிலைப்பாடும், அதன்வழி சார்ந்த கலை பண்பாட்டு நடவடிக்கைகளும் ஈழத் தமிழர்கள் தனித்தமிழ் வழக்கில் இறுக்கமும் பற்றும் உடையவர்களாக இருக்க வேண்டியதன் இன்றியமையாத் தன்மையை உணர்த்துகின்றன.

ஒரு குறிப்பிட்ட மொழிபேசும் மக்களின் அரசியல், சமுதாய அமைப்புக்களில் பெரிய மாற்றங்கள் உண்டாகும். அதனால் பிறமொழிக் கலப்பு ஏற்பட்டு தம் மொழியின் தனித் தன்மை அழிந்துவிடும் என்ற பயவுணர்வு தோன்றும்போது மொழித் தூய்மை பேணல் என்ற நிலைமை ஏற்படுகின்றது. ஆனால், காலந்தோறும் மக்களிடையே ஏற்படும் வளர்ச்சி மாற்றங்களுக்கேற்ப மொழியிலும் சில மாற்றங்கள் நிகழ்தல் வழக்கமாகும். அம் மாற்றங்கள் மொழியின் அடிப்படை இயல்புகளை மாற்றுவதில்லை. இவ்வாறில்லாது அடிப்படை மாற்றங்களுக்கு அகப்படுமேயானால், அம்மொழி தன் இயல்பான தன்மைகளை இழந்துவிடக் கூடிய ஆபத்துமுண்டு. தமிழ்மொழி, அம் மொழி பேசும் அனைத்து மக்களுக்கும் பொதுவானது. எனவே அது தன் பொதுத்தன்மைகளை இழக்காதவாறு அதன் தூய்மை பேணப்படவேண்டியது தமிழர் கடமையாகும். தமிழ் மொழி வழங்கும் மக்களினதும் அவர்கள் வாழும் மண்ணினதும் உணர்வு வெளிப்பாடாக இருக்க வேண்டுமே தவிர, பிறமொழியாளரின் உணர்வுகளுக்கு முதன்மை அளிக்கும் ஊடகமாகத் தமிழ்மொழி அமையாதவண்ணம் காக்கவேண்டிய பொறுப்பு தமிழ் வழங்கும் அனைவரது மேலான பணியாகும்.

### பிறமொழிக் கலப்பு

பிறமொழிக் கலப்பானது அரசியல், மதம், வணிகம், பண்பாடு முதலான காரணங்களால் ஏற்படலாம். மேற்குறிப்பிட்ட காரணிகளின் அடிப்படையில் தமிழ்மொழி வரலாற்றில் பிறமொழிச் [illegible] கலப்பு [illegible] ஒரு நாட்டிற் படையெடுத்து வந்து தங்கியிருக்கும்போது அவர்களது மொழிச் சொற்கள் மற்ற மொழியாளரது மொழியிற் கலப்பதுமுண்டு. எடுத்துக்காட்டாக இந்தியப்படை தமிழீழ மண்ணில் குடிகொண்டிருந்த போது தமிழில் ஜவான், போன்ற சொற்கள் பெரிதும் வழங்குவதாயின. ஆனால் அப்படையினர் நாட்டை விட்டகன்றதும் அச்சொற்களும் மெல்ல மெல்ல மறந்து போவதாயின.

**1**

தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தால் வெளியிடப்பட்ட 1992ம் ஆண்டு முத்தமிழ் விழா மலரில் இடம் பெற்ற கட்டுரை.

உலக மொழிகளின் வரலாற்றில் பிறமொழிக் கலப்பானது மதம் சார்ந்த மொழிகளின் வழியாகவே பெரிதும் ஏற்பட்டுள்ளது. கிறித்தவ மொழியாகிய இலத்தின் ஐரோப்பிய ஏனைய மொழிகளிலும், இந்து மத முதன்மொழியாகிய வடமொழி இந்திய ஏனைய மொழிகளிலும், பௌத்த மதத்தின் வழியாகப் பாளிச் சொற்களும், சமணத்தின் வழியாகப் பிராகிருதச் சொற்களும் பிற மொழிகளிற் கலப்பதாயின. தமிழில் வழங்கும் அரபு, உருது, பாரசீகச் சொற்கள் இஸ்லாத்தின் வழியாகத் தமிழிற் கலந்தனவாகும். கிறித்தவத்தின் வழி ஐரோப்பிய மொழிச் சொற்களை தமிழ்மொழி பெற்றுக்கொண்டது.

இவ்வாறாகக் காலம் காலமாக வெவ்வேறு சூழல்களில் வேறு வேறு காரணிகளின் அடிப்படையில் குறிப்பிட்ட ஒரு மொழியிற் பிறமொழிச் சொற்கள் புகுவதும், அதனை அம்மொழிபேசும் மக்கள் ஏற்றுக்கொள்வதும் வழக்கமாகும். மேற்கூறப்பட்ட காரணிகளையும் பிறமொழியாளரின் அடக்குமுறைகளையும் எதிர்த்து நிற்க வேண்டியதொரு சூழல் ஏற்படும்போது, தம்மொழியாளரின் நாடு, இனம், மொழி, கலை, பண்பாடு என்பவற்றை விடுவிப்பதற்கான உணர்வு மக்களிடையே தோற்றுவிக்கப்படுகிறது. தம் இனத்து தேசியம், தம்மொழிப்பற்று, சமுதாயப் புத்துருவாக்கம், அறிவியலைத் தம் மொழியில் உள்வாங்குதல் என்ற அடிப்படையில் பிறமொழிச் சொற்களை அகற்றி, தம் மொழியின் தூய்மை பேணும் முறை வலுப்பெறுவதையும், உலக மொழிகளின் வரலாற்றில் காணலாம்.

வளரத்துடிக்கும் எம்மொழியும் தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்ள விரும்புதல் இயல்பே. அப்போதுதான் அம்மொழி தனித்தன்மையுடன் வளர்கின்றது. மேற்கு ஐரோப்பிய மொழிகளிலும் மொழித்தூய்மை பேணும் நடவடிக்கைகள் பெரிதாக நடைபெற்றுள்ளன. குறிப்பாக பிரஞ்சுமொழி தூய்மை பேணும் முயற்சியானது, இயக்க அடிப்படையில் அரச துணையுடன் நடைபெற்றதை சுட்டிக் காட்டலாம். ஆங்கில மொழியில் [illegible] பிறமொழிச் சொற்கள் வழக்கில் இருப்பதை விரும்பாத அம்மொழியுணர்வாளர்கள் 1913 இல் "தூய ஆங்கிலக் கழகம்" நிறுவி ஆங்கில மொழித் தூய்மை பேணலில் ஈடுபட்டதையும் குறிப்பிடலாம். இந்திய மொழிகளிலும் சிறப்பாகத் திராவிட மொழிகளிலே வடமொழிச் செல்வாக்கை எதிர்த்துத் தூய்மை பேணும் செயற்பாடுகள் நடைபெற்றிருக்கின்றன. மலையாள மொழியில் வடமொழி எதிர்ப்பு நடவடிக்கைகளும், தெலுங்கு, கன்னட மொழிகளிலும் வடமொழி எதிர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

சிங்கள மொழியின் உருவாக்கத்தில் பாளி, பிராகிருதம், வடமொழி ஆகிய மும் மொழிகளின் பங்கு முதன்மையானதாகும். சிங்களவரிடம் சிங்களத் தேசியவாதம் தலைமேலெடுத்தபோது [illegible] பின்னர் தமிழர்களுடனும் தொடர்பு கொண்ட வடமொழிக்கு எதிராக தூய சிங்கள மொழி இயக்கமாகிய [illegible] இயக்கம் [illegible] அதற்குத் [illegible] தலைமை தாங்கியதையும் அறியக்கூடியதாக இருக்கிறது.

இவ்வாறாக பரந்த நோக்கில் மொழித்தூய்மை இயக்கங்களை நோக்கும்போது, ஈழத்தமிழர்கள் மொழித்தூய்மையை பேணவேண்டியதன் இன்றியமையாத் தன்மை தெளிவாகின்றது. ஈழத் தமிழர்களின் அரசியல் நிலைப்பாடு, பண்பாட்டுச் சீர்கேடு, இனப்பற்றின்மை, மொழிப்பற்றின்மை முதலிய தன்மைகளில் அகப்புறக்காரணிகளை ஆராய்ந்து நோக்கும் போது மொழி வழியான உணர்வூட்டல் தேவையாகின்றது. மொழி சமுதாயப் படைப்பாகவும், ஆற்றல் மிக்க சமுதாயக் கருவியாகவும் விளங்குவதால் மொழித் தூய்மை பேணல் வழியாகப் பலசெயல் திறன்களை நிலைநாட்டக்கூடிய வாய்ப்புக்களுள. இன்றைய நெருக்கடியான உறுதியான அரசியல் போராட்டக் காலத்தில் மொழித் தூய்மை பற்றிய எண்ணம் தமிழ்மக்கள் அனைவரிடமும் ஏற்படவேண்டும். அதற்குரிய வாய்ப்பினை நாளிதழ்கள், மேடைப் பேச்சுக்கள், ஆக்க இலக்கியங்கள், நூல்கள், விளம்பரப்பலகைகள், தெருப் பெயர்கள் முதலான வழக்குகளால் மக்களுக்கு அறிவும் பயிற்சியும் ஊட்டவேண்டிய பொறுப்பு இத்துறையாளர்களின் மிகப் பாரிய தேசியக் கடமையாகும்.

### காலந்தோறும் தமிழில் வடமொழி மேலாண்மை

வடமொழியாளரோடு தமிழ் மொழி உறவுகொள்வதற்கு முன்பு மேற்குலக நாடுகளோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தது எனினும் அவர்களது மொழிச் சொற்கள் தமிழில் மிக மிக அரிதாகவே [illegible] வரலாற்றுக் காலம் முதலாகத் தமிழ் நாட்டில் வடமொழியாளரின் செல்வாக்குப் படிப்படியாக ஏற்படுவதாயிற்று. தமிழ் நாட்டிற்குப் புலம் பெயர்ந்த ஆரியர் தமிழ்ப் பண்பாட்டுடன் கலந்தனர். ஆனால் தம்மொழி, தம் மதம், தம் இனம் என்பன தமிழரிலும் உயர்ந்தவை என்ற உணர்வே இவர்களிடம் இருந்தது. சங்ககாலத் தமிழ் மன்னர்கள் கூட ஆரியர்களை உயர்ந்தோராகவே மதித்தனர் என்பதை புறநானூறு முதலான இலக்கியத்தில் சான்று தருகின்றன. இதனால் ஆரியர் தம் திறன்களால் தமிழ் மன்னர்களை ஆட்படுத்தி உறவு கொண்டாடி தமிழரிடையே வடமொழிச் செல்வாக்கு ஏற்படத்தக்க வகையிலான பண்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரலாயினர். இதனால் ஆரியப் பண்பாட்டு மேலாண்மை தமிழரிடை ஊடுருவலாயிற்று. மதத்தின் பெயரால் இத்தகு மொழிநுழைவு ஏற்பட்டது. இதனால் தமிழகத்து அரசர்களும் வடமொழியின் மேலாண்மைக்குத் துணைபோன குற்றத்தைச் செய்துள்ளனர்.

சங்க கால இலக்கியங்களிலே ஆரியரின் சமூக நிலை போற்றப்பட்டதுடன், அவர்களின் செல்வாக்கினால் வடசொற்கள் தமிழில் வழங்கத் தொடங்கின. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பதாக இந்நிலைமை தமிழில் காணப்பட்டமையால், தொல்காப்பியர் தமிழில் வழங்கும் வடசொற்களுக்கும் வருமாறு இலக்கணம் கூறவேண்டியவரானார்.

'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா குமே'

(தொல். எச்ச. 5)

தொடர்ச்சி 14ம் பக்கம்

# தமிழன் என்று சொல்லடா...

யுத்த மேகங்களால் சூழப்பட்ட குவைத்தின் ஓர் இரவுப் பொழுது. ஈசன் நித்திரையின்றி படுக்கையில் புரள்வதும், எழுந்திருந்து யோசிப்பதும், 'லைட்'டைப் போட்டுவிட்டு அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடப்பதும், அடிக்கடி தண்ணீரை எடுத்து அருந்துவதுமாக இருந்தான். சிறிது கண்மூடும் போதும் யாரோ சத்தமாக கதவைத் தட்டுவது போன்ற பிரமை ஏற்பட்டு, நெஞ்சு படபடக்க எழுந்து விடுவான்.

எந்த இனவாத எதிரிக்கு முகம் கொடுக்க முடியாமல் சொந்த மண்ணை விட்டு இங்கு வந்தானோ, எந்த ஒரு போர்ச் சூழலுக்குப் பயந்து பெற்றோர், சகோதரர்களை கொழும்பில் வந்து வசிக்குமாறு கேட்டு, அடிக்கடி கடிதங்கள் எழுதி வந்தானோ அந்தப் பயங்கரங்கள் எல்லாம் இங்கு இப்போது அவனைச் சூழ்ந்து கொண்டு விட்டமையை உணர்ந்து பதற்றமடைந்திருந்தான் அவன்.

குவைத்தில், அவன் தொழில் புரிந்து வந்த அந்த நிறுவனத்தில் சில சிங்கள இளைஞர்களும் தொழில் செய்தனர். அவர்களில் இருவரிடம் ஏற்பட்ட சிறு வாக்குவாதம் இன்று இவ்வளவு பெரிய கொலைப் பயமுறுத்தலாக தன்னை எதிர்கொள்ளுமென அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. அவன் தமிழன் என்றதால் அவனை இன எதிரியாகவே அந்தச் சிங்கள இளைஞர்கள் நோக்கினர். அந்த இருவரோடு மற்றைய சிங்கள இளைஞர்களும் சேர்ந்து கொண்டனர்.

அவர்கள் எல்லோரும் அவனைக் 'கொட்டியா' என்றே அழைத்தனர். 'கொட்டியா கோ' (புலி எங்கே?)... 'கொட்டியா மொனவத கியான்னே' (புலி என்ன சொல்கிறான்?)... 'கொட்டியா யாப்பனே யன்னவா' (புலி யாழ்ப்பாணம் போக மாட்டான்).

இப்படியான வசனங்களை ஈசனுக்கு முன்பாகவே அவர்கள் சொல்வார்கள். இவர்களால் தனக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனையை ஒரு முறை நிறுவன அதிகாரி ஒருவரிடம் அவன் முறையிட்டான். அப்படியிருந்தும், தனக்கு எந்த ஒரு பாதுகாப்பும் இல்லையென்பதை அவன் உணரத் தொடங்கினான். இரவுகளில் நித்திரை இல்லாததால் பகல் முழுவதும் ஒரு நோயாளி போன்றே அவன் நடமாடினான். வேலைகளையும் சரியாகச் செய்ய முடியாமல், சாப்பிடவும் முடியாமல் பயத்துடன் அவனது நாட்கள் நகர்ந்தன.

அன்று யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. ஈசனின் இளைய சகோதரன் எழுதியிருந்தான். அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்த சில வரிகளை திரும்பத் திரும்ப வாசித்தான்.

'... அண்ணா, கொழும்பில் குடும்பத்துடன் வந்திருப்பது என்பது சாத்தியமானதல்ல. இங்கே அடிக்கடி சண்டை நடக்கிறது. இராணுவமும் சுற்றி வளைத்துள்ளது. எனினும் எமது அன்றாட வாழ்க்கை, கடமைகள் யாவும் வழமைபோல் நடந்துகொண்டு தான் இருக்கின்றன. அங்கு பத்திரிகைகளின் செய்திகளைப் பார்க்கும் உனக்கு, இங்குள்ள நிலைமையை கற்பனை செய்யும் போது பயங்கரமாகத் தான் தோன்றும். ஆனால் எமக்கு அப்படியில்லை. எமது மண், எமது வீடு, எமது வீதிகள், எமது சனம், எமது மரம் செடிகள் என எம் கண்களில் தினமும் படும்போது எமது வாழ்வு சந்தோசமானதாகவே இருக்கின்றது. போர்ச்சூழலும் பொருளாதாரத் தடைகளும் எமக்கு சவாலாக உள்ளனவே தவிர நாம் இன்னும் நம்பிக்கை இழந்து வீழ்ந்துவிடவில்லை. அங்கே பெரியதோர் போர் நடக்க உள்ளதாக இங்குள்ள பத்திரிகைகளில் படிக்கிறோம். உனது நிலையை நினைத்துத்தான் நாம் கவலைப்படுகிறோம். அம்மா அடிக்கடி அழுவா. கவனமாக இருக்கவும்....'

ஈசன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

உண்மைதான். அந்நிய மண்ணில், தனிமையில், அந்நியப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டு இன்னொரு அந்நியனை எதிர்ப்பது என்பது பிரச்சனையான விடயம்தான்.

ஈசன் தன் குடும்பத்தினரை கொழும்பில் வந்து இருக்குமாறு கடிதங்கள் எழுதியமைக்கு அவர்களின் பாதுகாப்பு என்பதைவிட இன்னொரு முக்கியமான காரணம் ஒன்று இருந்தது. தன்னுடைய இளைய சகோதரர்கள் யாரும் இயக்கத்தில் சேர்ந்து விடுவார்களோ என்ற பயம்தான் அது. அவர்கள் எழுதுகிற கடிதங்களையும் அதில் எழுதப்படும் சில வசனங்களையும் பார்க்கும் போது அப்படியான சந்தேகம் அவனுக்கு வருவதுண்டு.

அந்தச் சிங்கள இளைஞர்கள் ஈசனை கடுமையாகப் பின்தொடர்வது நாளுக்கு நாள் அதிகரித்தது. ஈசன் வேலைக்குப் போகாமல் ஒரு வாரம் லீவு எடுத்துக்கொண்டு அறையில் இருந்தான். அந்த வாரத்தில் ஒரு நாள் குவைத்தில் ஈசன் குடியிருந்த அந்தப் பகுதி மௌனமாக ஸ்தம்பித்தது. பத்திரிகைகளும், வானொலியும் பரபரப்பாக அறிவித்துக்கொண்டிருந்தன. ஈராக் இராணுவம் குவைத்தின் எல்லைகளை ஆக்கிரமித்துவிட்டது என்ற அறிவிப்புத்தான் அது. அடுத்தடுத்த நாட்களில் ஈராக் படை குவைத்தின் எல்லா இடங்களிலும் நடமாடத் தொடங்கி விட்டன.

குவைத்திலுள்ள வெளிநாட்டவர்கள் எல்லோரும் தத்தமது நாட்டு தூதரகங்களை நோக்கி பாதுகாப்புத் தேடி ஓடலாயினர்.

ஈசனும் பெட்டி படுக்கைகளோடு வெளியே வந்தான். அவனின் நண்பர்களான யாழ்ப்பாணத்து இளைஞர்கள் இருவரும் அங்கு வந்தனர். மூவருமாக வழியில் வந்த பஸ் ஒன்றை மறித்தனர். அதற்குள்ளும் பெட்டி படுக்கைகளோடு சில இளைஞர்கள். இலங்கை இளைஞர்கள் தாம்.

அவர்கள் இலங்கைத் தூதரகத்தை நோக்கித்தான் போய்க் கொண்டிருந்தனர்.

'ஆயிரக்கணக்கானோரை இந்தத் தூதரகங்கள் எப்படிப் பாதுகாக்கப் போகின்றதோ தெரியவில்லை. இவர்களாகவே தூதரகத்தை நோக்கிச் செல்கிறார்கள்.' இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்த ஈசனின் சிந்தனையைக் கலைத்தன பஸ்ஸுக்குள்ளிருந்த சில முகங்கள். அவை அந்தச் சிங்கள இளைஞர்களின் முகங்கள்.

ஈசன் மெல்ல தன் நண்பன் ஒருவனிடம் கிசுகிசுத்தான்.

'மச்சான் இவங்கள்தான்... நான் சொன்னனன் நான் வேலை செய்த கொம்பனியிலை என்னோட சண்டைக்கு வந்தவன்கள் என்று. இவங்கள் இதற்குள்ள இருப்பான்கள் என்று தெரிஞ்சிருந்தால் ஏறியிருக்க மாட்டன்.'

'சரி சரி பேசாமல் இரு. அவங்கள் நம்மைப் பாத்திட்டாங்கள்.' நண்பனும் பயந்தான்.

'அடோ கொட்டி.'

பின்னால் இருந்து ஒரு குரல் சத்தமிட்டது. சிலர் பஸ்சில் இருந்தவர்களை இடித்துக் கொண்டு முன்னால் வந்தார்கள். ஒருவன் ஈசனின் சேட்டைப்பிடித்து இழுத்தான். பஸ்சிற்குள் கலவரமாகி பஸ் ஓரிடத்தில் நிறுத்தப்பட்டு விட்டது.

ஈசனுக்கும் பஸ்சிலிருந்த சில தமிழ் இளைஞர்களுக்கும் நடுக்கம் பிடிக்க ஆரம்பித்தது. அந்த பஸ்சிற்குள் இருந்தவர்களில் அதிகமானோர் சிங்களவர்கள். தமிழ் இளைஞர்களை அவர்கள் பிடித்து கீழே இறக்கினர். இந்தப் பரபரப்பில் அந்த வீதிகளில் நின்ற இராணுவத்தினரை எவரும் கவனிக்கவில்லை. படபடவென துப்பாக்கி வேட்டுக்கள் முழங்கின. ஒரு படை வீரன் வானத்தை நோக்கிச் சுட பல இராணுவத்தினர் பஸ் நிறுத்தப்பட்ட இடத்தை நோக்கி ஓடி வந்தனர். விளங்காத மொழியில் பேசினர், அதட்டினர். அவர்களின் கைகளில் பச்சை குத்தியதைப் போல சதாம் குசெயினின் உருவமும், சதாம் என்ற வாசகமும் ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டு இருந்தன. அவை ஈராக்கிய படை என்பதை புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. அவர்களைக் கண்டவுடன் சிங்கள இளைஞர்களும் திகைத்துப் போய் விட்டனர். படையினர் ஏதோ கேட்டனர். ஒரு சிங்கள இளைஞன் ஈசனை இழுத்துப் பிடித்துக் கொண்டு வந்து அந்த இராணுவத்தினரிடம், 'ரைகர்... ரைகர்... எல்.ரி.ரி.ஈ. சிறீலங்கா...' என்று அவனைக் காட்டிக் கூறினான்.

படையினரில் ஒருவன் முன்னே வந்து ஈசனைப் பார்த்து, 'யூ ரமில்? சிறீலங்கா? ரைகர்?...' உடைந்த ஆங்கிலத்தில் விசாரித்தான்.

அந்தச் சிங்கள இளைஞனோ ஆர்வத்துடன் 'யேஸ்.. யேஸ்.. ரைகர்...' என அவனுக்கு தெரிந்த ஆங்கிலத்தில் சொன்னான்.

படையினர் சிலர் தங்களுக்குள் கதைத்துக் கொண்டார்கள். முகத்தில் மகிழ்ச்சி பொங்க ஈசனின் கைகளைப் பற்றிக் குலுக்கினார்கள். ஈசனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவர்கள் அருகில் நின்ற அவனின் நண்பர்கள் இருவருக்கும் கூட ஏதுமே புரியவில்லை. அந்த சிங்கள இளைஞர்கள் திகைப்புடன் இவர்களைப் போலவே எதுவும் புரியாமல் நின்றனர்.

## சிறுகதை

என்ன நடந்தது என அந்தப் படையினர் சைகையில் விசாரித்தனர். அந்தச் சிங்கள இளைஞர்களுடன் ஏற்பட்ட பிரச்சனைகளையும் பஸ்சில் நடந்தவற்றையும் சைகை மூலமாகவும் ஒரு சில ஆங்கில வார்த்தைகளை உபயோகித்தும் ஈசனும் அவனது நண்பர்களும் சொல்ல இராணுவத்தினர் புரிந்து கொண்டனர்.

படையினர் கோபம் கொண்டவர்களாக அந்தச் சிங்கள இளைஞர்களை கடுமையாக எச்சரிக்கை செய்து ஓடும்படி கட்டளையிட அவர்கள் ஓடிச் சென்றுவிட்டனர்.

பிறகும் அவர்கள் சிறீலங்கா ரமில், ரைகர் என்ற வார்த்தைகளை அடிக்கடி கூறி ஈசனையும், அவனது நண்பர்களையும் கைகளைப் பிடித்துக் குலுக்கி முதுகைத் தட்டி மகிழ்ச்சி தெரிவித்தபோது, அவர்களுக்கு இவர்கள் ஏன் இப்படி மகிழ்ச்சி தெரிவிக்கிறார்கள் என்பது புரிந்தது. தமிழீழப் போராளிகள் பற்றியும் அவர்களின் தலைவரைப் பற்றியும் அந்த ஈராக் படையினர் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

இலங்கைத் தூதரகத்திற்கு போய்க் கொண்டிருந்த அந்த பஸ்சில் ஈசனும் அவனது நண்பர்கள் இருவரும் சில தமிழ் இளைஞர்களுமே பிரயாணம் செய்து கொண்டிருந்தனர்.

'பாத்தியே மச்சான், ஈராக் ஆமிக்காரன் எங்கட நாட்டுப் போராட்டத்தையும், எங்கட பெடியளையும் கேள்விப்பட்டிருக்கிறான் போல. அதாலதான் இண்டைக்குத் தப்பினம்.'

'அங்கை சிங்கள ஆமியோட போராடி தமிழ் மக்களை பாதுகாக்கிற இயக்கந்தான் மச்சான் இண்டைக்கு எங்களை அநுகூல இந்த குவைத்தில காப்பாத்தி இருக்கு.' இவ்வாறாக நண்பர்கள் இருவரும் ஏதேதோவும் பேசிக்கொண்டுவர, ஈசன் மட்டும் ஆழ்ந்த மௌனத்துடன் யோசித்துக் கொண்டுவந்தான். ■

புவி

சாளரம் - தமிழீழம்

## கிறிஸ்மஸ் அன்றும் குண்டுவீச்சு

நத்தார் தினத்தன்று அரியாலைப் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகே இடம்பெற்ற குண்டுவீச்சில் ஒரு பெண் கொல்லப்பட்டு 12 பேர் காயமடைந்து 4 வீடுகள் பலத்த [illegible] மணலாற்றில் 24ம் திகதி இரவு தரை நகர்ந்த சிறிலங்கா இராணுவத்தின் மீது விடுதலைப்புலிகள் தாக்கியதால் 42 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 27 இராணுவத்தினர் காயமடைந்தனர். இதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே சிறிலங்கா இராணுவம் யாழ் அரியாலையில் குடிமக்கள் மீது குண்டு வீசியுள்ளது. ■

## வங்காலையில் மண்டை ஓடுகள்

வங்காலையில் தமது வீட்டுக் கிணற்றை [illegible] வயோதிபர் ஒருவர் தனது வீட்டுக் கிணற்றை சுத்தம் செய்தபோது 5 பேருடைய மண்டை ஓடுகள் எலும்புகூடுகள் என்பவற்றை கண்டெடுத்தார். நாலு அடையாள அட்டைகளும் அங்கு சிதைந்த நிலையில் கிடைத்துள்ளன. இதன்படி உயிலங்குளத்தைச் சேர்ந்த கோட்டக்கல்வி அதிபர் அந்தோனிப்பிள்ளை செபமாலை, வங்காலை ஆட்டோ ரத்தைச் சேர்ந்த பஸ்ரின் வம்பேட், முருங்கன் கண்டுக்குளியைச் சேர்ந்த செபமாலை அன்ரனி, பெரியபண்டிவிரிச்சானைச் சேர்ந்த சந்தியா ஆகியோரே கொல்லப்பட்ட நால்வருமாவரெனத் தெரியவந்துள்ளது. ■

## கட்டுமரத் தயாரிப்பில் இலவ மரம்

கட்டுமரங்களைத் தயாரிப்பதற்கு தென்பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்ட அல்பீசிய மரமே பயன்படுத்தப்பட்டு வந்தது. இதனால் போர்க்கால சூழ்நிலையில் கட்டுமரங்களைத் தயாரிப்பதில் மீனவர்கள் பலத்த கஷ்டங்களை எதிர்நோக்கினர். இதுகுறித்து ஆய்வு செய்த பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் அல்பீசிய மரங்களுக்குப் பதிலாக இலவ மரங்களை கட்டுமரத் தயாரிப்பதில் பயன்படுத்தலாமென அறிமுகம் செய்தது. அல்பீசிய மரத்தை விட நீண்ட காலம் நீரில் பாவிக்கக் கூடியதாகவும் நீரை உறிஞ்சும் தன்மை மிகக் குறைவாகவும் உள்ள இவ் இலவ மர பிரதியீட்டு முறை தமிழீழத்தில் கடல்வள பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பாகத் திகழ்கிறது.

# கூலி உழைப்பாளிப் பெண்களுடன்

**பூமணி**

நாட்டின் தலைவர்களாக, தொழிலதிபர்களாக, தொழில்நுட்ப வல்லுனர்களாக, பொறியியல் நிபுணர்களாக வரும் அளவுக்குப் பெண்கள் இன்று வளர்ச்சிப் பாதையிலே ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேநேரம் தமது அடிப்படை உரிமைகள்கூட நிறைவேறாத நிலையில், உரிமைகளைக் கேட்கக்கூட முடியாத நிலையில் பல பெண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்காமல் இருக்க முடியாது. பெண்ணை ஆண் அடக்குவதும் தொழிலாளியை முதலாளி சுரண்டுவதும் வளர்ந்து வருகின்ற நாடுகளிலே மிகச் சாதாரணமானவை. அதிலும் தேசிய உரிமைகள் மறுக்கப்பட்டு, அரச ஒடுக்குமுறைக்குள்ளே வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழீழத்திலே பெண்களின் நிலை எத்தகையது என்பதைச் சொல்லாமலே புரிந்துகொள்ளலாம். படித்த, அறிவுள்ள, ஆற்றல்கொண்ட பெண்களைவிட படிப்பறிவே இல்லாத, ஒரு விடயத்தை ஆய்வு செய்யும் திறன்குறைந்த, கூலி வேலை செய்யும் பெண்களே அதிகளவில் ஒடுக்கலுக்கும் சுரண்டலுக்கும் ஆளாகின்றனர்.

தமிழீழத்திலுள்ள உழைக்கும் பெண் வர்க்கத்தினரில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கூலித் தொழில்களையே, அதிலும் நிலம்சார் தொழில்களிலேயே ஈடுபடுகின்றனர். எந்தவிதமான முதலீடுகளோ, திட்டங்களோ, பயிற்சி நெறிகளோ இன்றி அன்றாட வாழ்க்கைக்கான வருமானத்தைக் கொடுக்கக்கூடிய ஒரே தொழில் கூலித்தொழில்தான்.

**அந்தத் தோட்டத்தைப் பார்க்கும்போது அது ஆயிரத்து எழுநூற்றைம்பது கன்றுத்தரை என்பது எங்களுக்குத் தெரிந்தது. அந்தப் பெண்கள் நன்றாக ஏமாற்றப்படுகிறார்கள் என்று விளங்கியதால், அவர்களிடம் அதைப் பற்றிச் சொன்னோம்.**

யாழ்ப்பாணக் குடா நாட்டில் கூலித் தொழிலாளர்கள் பலவிதமான பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றார்கள். இங்கே சாதியம் மிக இறுக்கமாக பின்பற்றப்படுகிறது. உயர் சாதியினர் 'என்று தம்மைக் கூறிக்கொள்வோரிடம்தான் நிலங்கள் பெரும்பாலும் சொந்தமாக இருக்கின்றன. சாதிய ரீதியில் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது பிழைப்புக்காக நில உடைமையாளர்களிடம் வேலை தேடிச் செல்கின்ற போது, வழமையாக எல்லா இடமும் நடப்பதுபோன்று முதலாளித்துவச் சுரண்டல் மாத்திரமில்லாமல் சாதிய ரீதியாகவும் ஒடுக்கப்படுகிறார்கள். அதிலும் குறிப்பாகப் பெண்கள் 'பெண்' என்ற ரீதியாகவும் ஒடுக்கப்படுகிறார்கள். நாம் இக்கட்டுரையில் யாழ்ப்பாணத்தில் வாழும் பெண் கூலித் தொழிலாளர்கள் தாம் வேலை செய்யும் இடங்களில் சந்திக்கும் பிரச்சனைகளை ஆராய முயலுகிறோம்.

தோட்டங்களிலோ, வயல்களிலோ வேலை செய்கின்ற பெண்கள் நிரந்தரமாக ஒரே இடத்திலேயோ அல்லது ஒரே வேலையையோ தொடர்ந்து செய்வதில்லை. செய்யவும் இயலாது. ஏனென்றால் மழைக்காலங்களில் மட்டுமே வயல்களில் நெல் விதைப்பும், அறுவடையும் செய்யப்படும். மாரி முடிந்தால் வயலிலே நெல் விதைக்க மாட்டார்கள். (யாழ்ப்பாணக் குடா நாட்டுப் பகுதியிலே மழைக்காலங்களிலே மாத்திரம் செய்யக்கூடிய புழுதி விதைப்பு என்ற முறையே பின்பற்றப்படுகிறது.) ஏறத்தாழ ஒரு மாதத்திற்குள் பயறு நடுவார்கள். இதன் பின்னர் தோட்டங்களிலே பருவகாலப் பயிர்கள் செய்கை பண்ணப்படும். அப்போது எந்தத் தோட்டத்தில் வேலை கிடைக்குமோ, அங்கே போய் வேலை செய்வார்கள். அண்மையில் உள்ள தோட்டங்களில் வேலை கிடைக்காவிட்டால், ஆறு, ஏழு மைல் தூரம் வரைகூட நடந்து தோட்டங்களைத் தேடிப்போவார்கள். வயிறை வளர்ப்பதற்காகத்தான் இத்தனை பாடுகளும்.

சாதாரணமாக நிலப்பரப்பைக் குறிப்பதற்காக நாம் பாவிக்கும் ஏக்கர், பரப்பு போன்ற சொற்கள் தோட்டங்களில் பெரும்பாலும் கையாளப்படுவதல்ல. 'கன்றுத்தரை' என்று சொல்வார்கள். அதாவது நூறு புகையிலைக் கன்றுகளையோ, மரவள்ளித் தடிகளையோ நடக்கூடிய நிலப்பரப்பை 'நூறு கன்றுத்தரை' என்பார்கள். ஆயிரம் கன்றுகளை நடக்கூடிய நிலப்பரப்பை 'ஆயிரம் கன்றுத்தரை' என்பார்கள்.



நூறு கன்றுத்தரையில் வேலை செய்வதற்கு ஒரு பெண்ணுக்கு முப்பத்தைந்து ரூபா சம்பளம். நூறு கன்றுத் தரையில் எந்த வேலையைச் செய்தாலும் எத்தனை நாளில் வேலை செய்தாலும் முப்பத்தைந்து ரூபாதான் வழங்கப்படும்.

நாங்கள் போனபோது ஒரு தோட்டத்தில் பெண்கள் வெங்காயம் கிண்டிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடன் நான் கதைத்தபோது தாம் வேலை செய்யும் தோட்டம் ஆயிரம் கன்றுத்தரையெனவும், அன்று மாலை ஆறு மணிக்குள் தோட்டம் முழுவதிலிருக்கும் வெங்காயத்தையும் கிண்டி முடித்துக் கூலியை வாங்கிச் செல்லப் போவதாகக் கூறினார்கள். அந்தத் தோட்டத்தைப் பார்க்கும் போது, அது ஆயிரத்து எழுநூற்றைம்பது கன்றுத் தரை என்பது எமக்குத் தெரிந்தது. அந்தப் பெண்கள் நன்றாக ஏமாற்றப்படுகிறார்கள் என்று விளங்கியதால், அவர்களிடம் அதைப்பற்றிச் சொன்னோம்.

தமக்கு அது தெரியாது எனவும் முதலாளி சொன்னதை நம்பித்தான் தாம் வேலை செய்வதாகவும் சொன்னார்கள். நாம் முதலாளி என்று கூறப்படுவரிடம் கதைத்தோம். அப்போது அவர், அது பள்ளமான கிடங்குகள் உள்ள காணி என்று ஏதோ நொண்டிச் சாட்டுகளையெல்லாம் சொல்லிவிட்டு, பின்னர் கூலியை உயர்த்திக் கொடுக்கப் போவதாகச் சொன்னார்.

சம்பவம் நடந்த அந்தத் தோட்டத்திலும் பக்கத்து பக்கத்துத் தோட்டங்களிலும் வேலை பெண்களுக்கு நாம் சொன்ன பின்னர் தான், தாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருந்தது தெரிந்தது. அவ்வளவு காலம் ஏமாற்றப்பட்டதையும் தமது கூலியையும் பற்றி அவர்களேதான் தத்தமது முதலாளிமாருடன் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதால் நாம் விலகிவிட்டோம்.

வேறு சில இடங்களில் மூவாயிரம் கன்றுத்தரையை இரண்டாயிரம் கன்றுத்தரையெனவும், இரண்டாயிரத்தி இருநூறு கன்றுத் தரையை இரண்டாயிரம் கன்றுத் தரையெனவும் முதலாளிமார் சொன்னதை நம்பி வேலை செய்து கொண்டிருந்த பெண்களுக்கு உண்மையை எடுத்துச் சொன்னோம்.

**தோட்டத்துக் குரக்கன் முழுக்கப் பிடுங்கி, ஆறேழு தரம் குத்திப் பிடைச்சுக் குடுத்தாப் பிறகு, ரெண்டு கொத்துக் குரக்கன் தருவார். அது ரெண்டு கொத்துக்கூட இருக்காது.**

இதைவிட இரண்டுபேரை வேலைக்கு வருமாறு கூப்பிடும் போது மூவர் வந்தால், இரண்டு பேருக்குரிய சம்பளமே மூவருக்கும் பிரித்துக் கொடுக்கப்படுகின்றது. வேலை இல்லாத கொடுமையில் ஒரு பெண் கூடுதலாக வந்துவிட்டார் என்பதற்காக இருவரின் சம்பளத்தையே மூவருக்கும் கொடுப்பது எந்த வகையில் நியாயமாகும்? ஆனால் பெண்களுக்கு மாத்திரமே இக்நிலை என்பதுதான் வேதனையான விடயம்.

குரக்கன் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தசில பெண்கள் சொன்னார்கள்:
'சாப்பாட்டுக்குக் கஸ்ரத்திலை, வேலை தருவீங்களோ என்று கேட்டு வந்ததாலை முதலாளி எங்களுக்குக் கூலி தாறதில்லை. தோட்டத்துக் குரக்கன் முழுக்கப் புடுங்கி, ஆறேழுதரம் குத்திப் புடைச்சுக் குடுத்தாப்பிறகு, ரெண்டு கொத்து குரக்கன் தருவார். அது ரெண்டு கொத்துக் கூட இருக்காது.'

'எத்தனை நாளில வேலையைச் செய்து முடிப்பீங்கள்?'

'பதினைஞ்சு நாளாவது வேணும்.'

வேலை வேண்டும் என்று தேடிப் போனதற்காகப் பதினைந்து நாள் வேலைக்கு இரண்டு கொத்துக் குரக்கன்தான் கூலியா?

இன்னோரிடத்தில் குரக்கனை இடித்துக் கொடுத்துவிட்டு சம்பளத்திற்காக காத்துக்கொண்டிருந்த பெண்கள்.

'கஸ்ரப்பட்டு இடிச்சுக் குடுக்கிற எங்களுக்குக் கொஞ்ச குரக்கன் கூடத் தராட்டார். ஒரு கொத்து இடிக்கிறதுக்கு போன வருசம் நாற்பது ரூபா தந்தார். இந்த வருசம் நாங்களா சண்டை பிடித்து ஐம்பது ரூபா வாங்கிப் போட்டம். இண்டைக்குத் தாறதுக்கு காசில்லை என்டு முதலாளி சொன்னார். காசில்லாமல் நாங்கள் போகமாட்டம் என்டு சொல்லிப் போட்டு இருக்கிறம். முதலாளி காசு மாத்திக் கொண்டு வரப் போட்டார்' என்று சொல்லியபடி காத்துக் கொண்டு நின்றனர்.

சில இடங்களில் நாட்கூலியாக முப்பது ரூபாக்கூடக் கொடுக்கப்படுகிறது. கூலிப் பெண்கள் முப்பது ரூபாவை மாத்திரமல்ல, முதலாளியின் இழிவான வார்த்தைகளையும், கேவலமான பார்வைகளையும்கூட வாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

பாடசாலையில் படித்துக் கொண்டே கூலி வேலைக்கு வரும் சில இளம்பெண்களையும் சந்தித்தோம்.

இரு சகோதரிகள் முறையே பத்தொன்பது, பதினைந்து வயதை உடையவர்கள். முன்பு இருவருமே படித்துக்கொண்டு இருந்தார்கள். ஆனால் பாடசாலைக்கு சுத்தமான உடையணிந்து செல்வதும், பயிற்சிப்புத்தகங்கள், பேனாக்கள் வாங்குவதும் சாத்தியமாகாமல் போகவே, மூத்தவர் கல்வியை நிறுத்திவிட்டு முழுநேரமும் கூலி வேலைக்குப் போகிறார். இளையவர் படித்துக் கொண்டு சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மூத்தவருடன் கூலி வேலைக்கு வருகிறார்.

**சில இடங்களில் நாட்கூலியாக முப்பது ரூபா கூடக் கொடுக்கப்படுகிறது. கூலிப்பெண்கள் முப்பது ரூபாவை மாத்திரமல்ல, முதலாளிமாரின் இழிவான வார்த்தைகளையும், கேவலமான பார்வைகளையும் கூட வாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது.**

இன்னொரு பெண் அவரும் மாணவிதான். சனி, ஞாயிறுகளில் மட்டுமே கூலி வேலைக்குப் போவதால் எல்லாப் பெண்களுக்கும் நாட்கூலியாக நாற்பது ரூபா தரும் முதலாளி அவருக்கு மட்டும் முப்பது ரூபாதான் தருகிறாராம். முதலாளி தரும் சாப்பாட்டைப் பற்றிச் சொல்லும் போது, 'இவை தாற அரை இறாத்தல் பாண் நாங்க செய்யிற வேலைக்குக் காணாது. முக்கால் இறாத்தல் ஒரு இறாத்தலாவது வேணும். தேத்தண்ணியையும் சீனிபோடாமல் தருவினம். இவை தாற சீனியைத் தொட்டுத் தொட்டுக் குடிச்சே எங்கடை பல்லெல்லாம் அழிஞ்சு போச்சு' என்று குமுறினார்.

தாம் வேலைக்கு வரும்போது அயலில் வசிப்பவர்கள், 'இவை பெடியளோடை கதைக்கத்தான் போயினம்' என்று தம்மைக் கேலி செய்கிறார்கள் என்று இளம்பெண்கள் சொன்னார்கள். 'இப்ப உங்களோடை கதைச்சதைக் கண்டால் காணும், அவையோடை போகப் பாயினம் என்று ஊர் முழுக்கக் கதை பரப்பிடுவார்கள்' என்று சொன்னார்கள்.

இனி இவர்களுக்கு கொடுக்கப்படும் உணவைப் பற்றிப் பார்ப்போம்.

சாதாரணமாக ஒரு பெண்ணுக்கு அரை இறாத்தல் பாண்தான் வழங்கப்படுகிறது. ஆனால் இரண்டு பேரை வேலைக்கு வருமாறு கூப்பிடும்போது மூவர் போனால், இரண்டு பேருக்குரிய ஒரு இறாத்தல் பாண்தான் கொடுக்கப்படும். அதைத்தான் மூவரும் பகிர்ந்து சாப்பிட வேண்டும்.

தேநீருடன் தொட்டுக் குடிப்பதற்குப் பத்துப் பேருக்கு ஐம்பது கிராம் சீனி கொடுக்கப்படும். போதாது என்று கேட்டாலும் அதேயளவு சீனிதான் மறுநாளும் தரப்படும். தேநீரில் சாயம் இராது வெறும் சுடு நீராகவே இருக்கும் என்பதுதான் பலரும் எமக்குக் கூறிய தகவல்.

வேலை முடிந்து வீடு திரும்பும் போது, பக்கத்துத் தோட்டங்களில் வாங்கும் கீரையும் கடையில் வாங்கும் அரிசியும்தான் இவர்களது இரவுணவு. போகும் வழியில் பொறுக்கிச் செல்லும் கள்ளிகளைத் தான் விறகாகப் பாவிக்கிறார்கள். பெரும்பாலும் ஒரு நேரம்தான் சமைத்து உண்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# நிகழ்வும் நினைவும்

- திலீபன் -

# தெரிவுக்குழுவின் 'தீர்வும் பிரச்சினையும்'

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தினை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகள், பாராளுமன்றத் தெரிவுக்குழு, அதன் அரசியல் தீர்வு முன்னெடுப்புகள் 'தமிழர் தரப்பு' பிரேரணைகள் என்ற ரீதியில் தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் பெரும் சர்ச்சையினை எழுப்பியவண்ணம் தொடர்ந்தவண்ணமேயுள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான திரு தொண்டமான் அவர்கள் தெரிவுக்குழுவிலிருந்து வெளியேறியமையும் இவ் அரசியல் சர்ச்சைகளில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது.

அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டம் தெரிவுக்குழுவினால் நிராகரிக்கப்பட்டிருந்தமை அவரின் வெளியேற்றத்திற்கும் சீற்றத்திற்கும் காரணமாக அமைந்தது எனலாம்.

தொண்டமானினால் முன் வைக்கப்பட்ட தீர்வுத் திட்டம் தமிழீழ மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கக் கூடியதாக அமைந்ததா? அது குறித்த விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன? போன்ற விடயங்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு அன்ரன் பாலசிங்கம் அவர்களினால் எழுதப்பட்ட நீண்ட கட்டுரையில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

அமைச்சரது தீர்வுத்திட்டம் குறித்து ஆராய்வது இன்றைய 'நிகழ்வும் நினைவும்' பகுதியின் நோக்கமல்ல. அமைச்சர் தொண்டமானினால் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சி 'தெரிவுக்குழு' எனும் ஆயுதம் கொண்டு தடுத்து நிறுத்தப்பட்டதும், பின்னர் தெரிவுக்குழுவினூடாக அத்தீர்வுத்திட்டம் நிராகரிக்கப்பட்டதும் சிங்கள பௌத்த இனவாதம் எவ்வாறு செயற்படும் என்பதனை மீண்டுமொரு முறை உறுதிப்படுத்தியுள்ளா இவ்வேளையில் இவ் தெரிவுக்குழுஎவ்வாறு தமிழீழ மக்களின் தேசிய ஒருமைப்பாட்டினைச் சிதைக்கும் தீர்வுத்திட்டத்திற்கு முயற்சிக்கிறது என்பதனையும், அத்தீர்வுத் திட்டம் ஒன்றினை அமுல்படுத்துவதில் ஏற்படக் கூடிய சிக்கல்களையும் இன்றைய நிகழ்வும் நினைவும் பகுதியில் நோக்குவோம்.

மிகச் சுருக்கமாகக் கூறின் வடக்கு கிழக்கு மாகாணங்களை இரு துண்டுகளாகப் பிரித்து தமிழீழ மக்களின் தேசியப் பண்பினைச் சிதைக்கும் முயற்சிக்கு ஒரு அரசியல் வடிவம் கொடுக்கும் செயற்பாடே இன்றைய தெரிவுக்குழுவின் முன்னால் உள்ள 'தேசியப்பணி' எனலாம்.

தமிழீழ மக்களின் தேசியப் பண்பினை, தேசிய ஒருமைப்பாட்டினை வளர்த்தெடுப்பதற்கு முக்கியமான தமிழீழ மக்களின் பொதுப்பிரதேசமும் அப் பிரதேசத்தின் ஒருமைப்பாடும் பௌதீக ரீதியாக அழிக்கப்பட்டால், அதன்பின் தேசிய இனம் என்ற தகுதியினை நிராகரிப்பதும், அந்நிராகரிப்புடன் தமிழீழ மக்கள் மத்தியில் தேசிய ஒருமைப்பாடு வளர்ந்து செல்லக்கூடிய நிலைமைகளை தடுத்து நிறுத்த முடியும் என்பதும் சிங்கள பௌத்த இனவாதத்தின் அடிப்படைத் திட்டமாகும்.

தமிழீழம் உருவாகாது தடுக்க வேண்டுமாயின் தமிழீழத்திற்கான அடிப்படைகளை தகர்த்தெறிய வேண்டும் என்பதும் அவ்வடிப்படைகளில் பிரதானமானது தமிழீழ மக்களின் பிரதேச ஒருமைப்பாடு என்பதும் சிங்கள பௌத்த இனவாதிகளால் தொடர்ச்சியாக கட்டிக்காட்டப்பட்டு வந்துள்ளது.

இதன் அடிப்படையிலேயே வட தமிழீழத்தினையும் தென் தமிழீழத்தினையும் இருவேறு நிலைப்பாடுகளாக்கும் திட்டத்தினை மணலாற்று (வெலி ஓயா) பிரதேசத்தில் செயற்படுத்தத் தொடங்கியது சிறீலங்கா அரசு.

சிறீலங்கா அரசின் இத்திட்டம் விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்பு மிகுந்த போராட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டு வரும் இவ்வேளையில், அரசியல் ரீதியாக வடக்கு, கிழக்கு இணைப்பினை நிராகரிக்கும் செயற்பாடுகளும் திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரசியல் செயற்பாடுகளுக்கு களம் கொடுக்கும் நோக்குடன் 'தெரிவு குழு' தனது செயற்பாடுகளைத் தொடங்கியது.

நான் கடந்த நிகழ்வும் நினைவும் பகுதியில் குறிப்பிட்டதைப் போல இராணுவத் தீர்வு முயற்சிக்கு கவசமாக தெரிவுக்குழு பயன்படுத்தப்பட்டதோடு, தமிழீழப் பிரதேசங்களில் பிரதேச ஒருமைப்பாட்டினைச் சிதைக்கும் ஒரு 'அரசியல் தீர்வு' திட்டத்தினை தெரிவுக்குழுவினூடாக வெளிப்படுத்துவது சிறீலங்கா அரசின் அரசியல் நகர்வுகளில் முக்கிய இடத்தினை வகித்தது.

இதற்குத் தமிழ்க் குழுக்களையும் தாராளமாகவே சிறீலங்கா அரசு பயன்படுத்திக் கொண்டது. 'சிறீனிவாசன் தீர்வுத் திட்டம்' என்ற பெயரில் சுயாட்சி அமைப்புக்கு கொச்சையான விளக்கம் அளிக்கப்பட்டது. சுய அதிகாரங்களைக் கொண்டியங்கிய பல நாடுகளிலே அம்முறை தோல்வியினைத் தழுவி இனத்துவத் தேசியம் புதிய நாடுகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களை பிரிக்கும் நயவஞ்சகமான திட்டத்திற்கு 'சுயாட்சி' என்ற வார்த்தை அலங்காரங்கள் பிரயோகிக்கப்பட்டன. சிங்கள பௌத்த இனவாதத்தின் செல்லப் பிள்ளையாக இருந்து தமிழீழ மக்களுக்கு என்னால் எவ்வளவு துரோகம் செய்யமுடியும் என்பதனை இத்திட்டத்தின் மூலம் பச்சையாக வெளிப்படுத்தினார் சிறீனிவாசன்.

வடக்கு - கிழக்கிற்கு தனித்தனியான சபை, ஒரு பொதுவான ஆளுனர் என்றரீதியில் வடக்கு கிழக்கு பிரதேச ஒருமைப்பாட்டினை சிதைக்கும் திட்டத்தினை [illegible] வெளிப்படுத்தியது. தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் குறித்து தனது எதிர்ப்பினை வெளிப்படுத்தி அமைச்சர் தொண்டமான் வெளியேறியபோதும் கொழும்புத் தமிழ்க்குழுக்கள் இன்னமும் அக்குழுவுடன் ஒட்டிக் கொண்டே உள்ளன. வடக்கு கிழக்கு இணைந்த தீர்வினைத் தவிர்ந்த வேறு தீர்வினைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று இன்று கூறும் இக்குழுக்கள் நாளை வெவ்வேறு காரணங்களைக்கூறிக் கொண்டு தெரிவுக் குழுவினால் எடுக்கப்படும் முடிவுகளுடன் ஒத்துப் போவார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. தமது இருப்பும் தம்மை அரவணைப்பவரின் ஆதரவுமே இவர்களுக்கு முக்கியமானதாக இருப்பதனால் இவர்களைப் பொறுத்தவரை இது தவிர்க்க முடியாததே.

இந்த வகையில், தெரிவுக்குழு வடக்கு கிழக்கு பிரிந்த ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதும் அத்திட்டத்தினை நிறைவேற்ற சிறீலங்கா அரசால் முடியுமானால் அத்திட்டத்திற்கு தமிழ்க் குழுக்கள் ஒத்துழைப்பு வழங்குவதும் தமிழீழ மக்களின் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு என்ற பெயரில் நடாத்தப்பட இருக்கும் அடுத்த அரசியல் திருவிழா எனலாம். ஆனால் எத்தகைய தீர்வுத் திட்டத்தினையும் கொழும்பிலிருந்து காகிதங்களில் வரைந்து விடுவது போல் செயற்படுத்த முடியுமா? இதுவே இன்று கொழும்புக்காரர்களின் பிரதான தலையிடியாக அமைகின்றது.

கிழக்கில் விடுதலைப் புலிகள் பல பகுதிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதும், தொடர்ச்சியான தாக்குதல்கள் மூலம் சிறீலங்கா இராணுவத்திற்கு பலத்த இழப்பினை ஏற்படுத்தி வருவதும் இந்த அரை குறை தீர்வுத்திட்டத்தினை எவ்வாறு அமுல்படுத்துவது என்ற கேள்வியினை எழுப்பியுள்ளது.

இப்பிரச்சனைக்குத் தீர்வாக இரண்டு அணுகுமுறைகள் கொழும்பு வட்டாரங்களில் விவாதிக்கப்படுகின்றன.

1. கிழக்கில் விடுதலைப் புலிகளை அழித்தொழித்தல்.
2. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துதல்.

முதலாவதும், பலராலும் விரும்பப்படுவதுமான தீர்வு விடுதலைப் புலிகளை கிழக்கிலிருந்து இல்லாதொழித்தலே. கிழக்கிலிருந்து புலிகளை இல்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

## தூய தமிழ் வழக்கு...

வடசொற்கள் தமிழில் புகும்போது தமிழ் மொழியின் ஒலியமைப்புக்கு ஏற்றவாறு மாறியமைய வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து. கி.பி. 5ஆம் நூற்றாண்டு அளவில் தமிழ் நாட்டில் சமண, பௌத்த சமயங்கள் நன்கு நிலைபெற்றுவிட்டன. அவர்கள் தம் மதக் கொள்கைகளை சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள், நாலடியார் முதலான அறநூல்களின் வழியாகத் தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தலானார்கள். இம் மதத்தவர்கள் கூட தம் மதக் கொள்கைகளை வடசொற்களினூடாகவே பெரிதும் கூறினர். இதனால் இம் மதங்களும் வடசொல் மேலாண்மைக்கு வழிவகுத்தன. அக்கால இலக்கிய வழக்கில் 4 அல்லது 5 விழுக்காடு வடசொற்கள் தமிழிற் காணப்பட்டன என்கிறார் வரதராசன் அவர்கள். இதே காலகட்டத்தில் சமண, பௌத்த இலக்கியங்களினூடாகத் தமிழில் பாளி, பிராகிருதச் சொற்களும் கலந்து கொண்டன.

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தமிழக ஆட்சியைக் கைப்பற்றிய பல்லவ மன்னர்கள் வேற்று மொழியாளராவர். அவர்கள் ஆரியர் பக்கம் சார்ந்து வடமொழியையே ஆட்சி மொழியாகக் கொண்டனர். வடமொழியாளர்கள் வடமொழிக் கல்விக் கூடங்களையும் அரச துணையுடன் நடாத்தினர். பல்லவர்கள் தமது அரச பட்டப் பெயர்களையும் வடமொழியிற் சூடிக் கொண்டனர். தமது கட்டளைகள், அறிவிப்புக்கள் அனைத்தையும் வடமொழி கலந்த தமிழில் வெளியிட்டனர். பல்லவர் காலத்து கல்வெட்டுக்கள் இதற்குச் சான்றாகும். வடமொழியாளருக்கு அரசு பெரிதும் உதவியாக இருந்தது. இக் காரணங்களால் தமிழ் மொழி தவிர்த்து நசுக்கப்பட்டது.

இவ்வாறு அரச துணையுடன் நடைபெற்ற வடமொழித் திணிப்புக்கு மக்கள் எழுச்சியே தடையாக அமைந்தது. சைவ, வைணவ மதத் தலைவர்களாக விளங்கிய நாயன்மார்களும், ஆழ்வார்களும் அனைத்து மக்களையும் மதத்தின் பெயரால் அணி திரட்டி அவர்களுக்குத் தமிழ் உணர்வு ஊட்டினர். திருநாவுக்கரசர் 'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்' (6 திருத்தாண்டகம்-5) எனத் தமிழின் பெருமை பேசினார். 'நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்' எனத் திருஞான சம்பந்தர் தன்னை தமிழியக்கத் தலைவராக உயர்த்திச் செயற்பட்டார். இக்காலப் பக்திப்பாடலை நோக்கும்போது அவற்றிடையே முன்னரிலும் விட வடசொற் கலப்பு மேலோங்கிக் காணப்பட்டபோதிலும், வடமொழி மீதான காழ்ப்புணர்ச்சியும், தமிழ் உயர்மொழி என்ற அடிப்படையிலான மொழிப்பற்றும் மக்களுக்கு ஊட்டப்பட்டிருந்ததைக் கண்டுகொள்ளலாம்.

தமிழ்ப் பேரரசர்களான சோழ மன்னர் காலத்திலும் வடமொழியே ஆட்சி மொழியாக இருந்தது. வடமொழியிலிருந்து பல வேறு வகை இலக்கியங்கள் தமிழில் ஆக்கம் பெறலாயின. மத உண்மை விளக்க நூல்களும் தோன்றலாயின. சாசனத்தின் செல்வாக்கும், அரசியலில் பார்ப்பனர்களுக்கு கிடைத்த சலுகைகளும் தமிழில் வடசொற்கள் பெரிதளவு இடம்பெற வாய்ப்பளித்தன. இது குறித்து கே.கே. பிள்ளை அவர்கள் கூறும் கருத்து ஈண்டு பொருத்தமாகின்றது.

"பல்லவர் காலத்திலும் சோழர் பாண்டியர் காலத்திலும் மன்னரின் அனுசரணையின் பேராலோ தானாகவோ தமிழகத்தில் அலையலையாக வந்து குடியேறிய பிராமணர்கள் புதுப் புதுப் பெயர்களைப் பூண்டவர்கள். புதிய குல தர்மத்தைக் கடைப்பிடித்தவர்கள். வடமொழியையன்றி வேறு மொழியை விரும்பாதவர்கள். வடமொழியின் ஏற்றத்துக்கென மன்னரிடம் பல சலுகைகளையும் செல்வாக்கையும் கொண்டு தமிழுக்கு கூற்றாக வந்தவர்கள்."

சோழர் காலத்தில் தமிழ் மொழியிற் தோன்றிய காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், உரை நூல்கள் முதலியனவற்றிலே தவிர்க்க முடியாதவாறு அரச சமய சமூகக் காரணங்களால் வடசொற்கள் பெரிதும் இடம் பெறலாயின. கம்பர்கூட 'தேவபாடை' என்று வடமொழிக்கு ஏற்றம் கொடுத்துள்ளார். அக்கால உரைகாரரும் வடமொழிக்கு ஏற்றம் கொடுத்தனர். ■

அடுத்த இதழில் தொடரும்

## மாவீரரின் தியாகத்...

எமது மக்கள் சிந்திய இரத்தமும், எமது மாவீரர் புரிந்த தியாகமும் வீண்போகாது இருக்க நாம் உறுதி தளராது போராடுவோம். எமது இலட்சியப் பயணத்தில் எத்தனையோ ஆபத்துக்களை, எத்தனையோ சவால்களை, எத்தனையோ நெருக்கடிகளை நாம் சந்தித்துவிட்டோம். இனி எம்மை எதுவும், எவரும் அசைக்க முடியாது. நாம் துணிந்து போராடுவோம். வரலாறு எமக்கு வழிகாட்டியாக நிற்கிறது. சத்தியம் எமக்கு சாட்சியாக நிற்கிறது.

எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கும் மாவீரர்களே!

உங்கள் இரத்தத்தால் எங்கள் விடுதலை வரலாறு மகத்துவம் பெறுகிறது.

உங்கள் இலட்சிய நெருப்பால் எங்கள் போராட்டம் புனிதம் பெறுகிறது.

உங்கள் தியாகத்தால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகிறது.

உங்கள் நினைவுகளால் எங்கள் உறுதி வைரம் பெறுகிறது.

எங்கள் தேச சுதந்திரத்தின் சிற்பிகளாகிய உங்களை நாம் சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்."

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" ■

## பெண்கள் மீதான...

நடவடிக்கைகளுக்கும் ஆளாகவேண்டியிருக்கிறது. தொழில் [illegible] பட்சம், பதவி உயர்வு நிறுத்தம், சம்பளத்தில் வெட்டு, பதவி நீக்கம் இப்படியாகப் பல நெருக்குதல்களையும் பெண்கள் எதிர்கொள்கிறார்கள். இந்த மோசமான நிலையிலிருந்து பெண்களுக்குப் பாதுகாப்பு அளித்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டும் வகையில் பல நாடுகளில் தொழிற் சட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

ஆணாதிக்க அதிகார உறவு தளையிருந்தாலும் வேலைத்தளங்களில் பாலியல் துன்புறுத்தல்கள் எவ்வாறு நடைபெறுகின்றன, எந்த வடிவத்தில் நடைபெறுகின்றன என்பதனை வகைப்படுத்தி இனங்கண்டு அவற்றைத் தடுக்கச் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கலாம். ஆயினும் வேலைத்தளங்களுக்கு அப்பால், பல்வேறு சமூகச் சூழ்நிலைகளில் பாலியல் துன்புறுத்தல்கள் நிகழத்தான் செய்கின்றன. இது உலக ரீதியாகப் பெண்ணினம் எதிர்கொள்ளும் ஒரு கசப்பான உண்மையாகும். ■

நன்றி
சுதந்திரப்பறவைகள் தமிழீழம்

# ஊட்டச்சத்து குறைந்த நிலையில் திருமலை அகதி முகாம் சிறுவர்கள்

திருகோணமலையில் அகதி முகாம்களிலும், மீளக்குடியமர்த்தப்பட்ட இடங்களிலும் வாழும் ஐந்து வயதுக்குக் குறைந்த சிறார்கள் ஊட்டச்சத்து குறைந்தவர்களாய் வளர்வதாக சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட ஆய்வொன்றிலிருந்து தெரியவருகின்றது.

ஊட்டச்சத்து குறைவு ஆய்வு இங்கிலாந்து நிறுவனமான குழந்தைகள் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது.

முன்பு திருகோணமலை மக்களுக்கு மீன், உணவு, காய்கறி வகைகள், தானியங்கள் தாராளமாகக் கிடைத்தன. அதனால் அவர்களின் தேகநிலை மிகத் திருப்திகரமாக இருந்தது என திருகோணமலை பதில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஈ. ஜி. ஞானகுணாளனன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இன்றுள்ள சூழ் நிலையில் நிலைமை முற்றிலும் வேறுவிதமாக மாறி முன்பு வசதியாக வாழ்ந்த மக்கள் தொழில் வசதிகளை இழந்து முகாம்களிலும் மீளக்குடியமர்த்தப்பட்ட இடங்களிலும் வாழ்கிறார்கள் என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

நல்லூர், பாட்டாளிபுரம், பள்ளிக்குடியிருப்பு, பச்சைனூர், கிளிவெட்டி ஆகிய கிராமங்கள் விசேடமாகக் கவனிக்கப்படவேண்டிய இடங்களாகும். ஆனால் பாதுகாப்புக் காரணங்களினால் அந்த இரு கிராமங்களையும் எம்மால் அடையமுடியவில்லை என்றும், ஊட்டச்சத்துள்ள உணவு வகைகளை வழங்கி சிறார்களின் நலன்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனியாது விட்டால் தேக ஆரோக்கியம் மற்றும் உளவளம் பாதிக்கப்பட்ட ஒரு தலைமுறை தான் மிஞ்சும் என்று ஞானகுணாளனன் எச்சரித்துள்ளார். ■

## விடுதலைக்கு விற... கான...

லோன் குழாய்களும்தான் அவருடன் பேசின.

1989 இன் நடுப்பகுதியில் ஒரு இரவு.

வழமைபோல அவர்கள் அவரைப்பிடித்துச் சென்றார்கள். மறுநாள் அவர் திரும்பி வரும்போது உடலில் பெரிய தாக்கங்களை ஏற்படுத்திய உட்காயங்களோடு வந்தார்.

மிகவும் ஆபத்தான நிலையில் உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனாலும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. எம்மைப் பிரிந்து திரும்பி வரமுடியாத தொலைவுக்குச் சென்றுவிட்டார். அதன்பின்பு அவரினதும், அக்காவினதும் பிள்ளை சுபாஜினி, பதுமநிதியாகி சண்டைக்களங்களில் நின்றான்.

அம்மா கட்டிலில் இருந்து கொண்டே முன்னால் தொங்கிக்கொண்டிருக்கும் பதுமநிதியின் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பதுமநிதி அம்மாவின் பேரப்பிள்ளை. ஆனையிறவுப் பெருஞ் சமரில் ஒரு நாள் சண்டையில் அவன் வீரச்சாவைத் தழுவிக்கொண்டான்.

அம்மாவுக்கு ஏற்பட்ட இந்தத் தொடர் இழப்புகள், அவளை வேதனையில் ஆழ்த்தின. ஆனாலும் அவள் உறுதியோடும் நம்பிக்கையோடும் வாழ்கிறாள்.

அம்மாவின் மற்றைய மூன்று பிள்ளைகள் இப்போதும் புலிகளோடு நிற்கிறார்கள். தமது உடன் பிறந்தவர்களின் நினைவுகளோடு தேசத்திற்காக உழைக்கின்றார்கள்.

அம்மா கதிரையில் வாழத் தொடங்கி பல வருடங்கள் ஆகிவிட்டன. அதில் இருந்து கொண்டு தன் துயரங்களைத் தாங்கிக்கொண்டாள். உண்மைதான்... அம்மாவால் நடக்க முடியாது.

அவளை அந்தக் கொடிய நோய் முடக்கிவிட்டது. அசையாமல் இருந்து இரவுகளில் மட்டும் மனத்திற்குள் அழும் அம்மாவின் மனதிற்குள்ளும், நிறைவான சம்பவங்கள் உண்டு.

ஒரு இரவு அம்மா வழமை போலவே இருளுக்குள் தன் பிள்ளைகளை இதயத்தால் தேடிக் கொண்டிருந்தபோது, கதவு தட்டப்பட்டது. விழித்தாள்.

யாரோ ஓடிச்சென்று கதவைத் திறந்தனர். வெளிச்சம் பரவியது. தலைவர் பிரபாகரன் வந்தார். அம்மாவால் நம்பமுடியவில்லை. ஏதோவொரு பரவசத்தில் அம்மா தன்னுடைய கட்டிலின் அருகில் வந்திருந்த அவரை வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"அம்மா! உங்கட கையால நான் சாப்பிட்டிருக்கிறன்" -அவர் சொன்னார்.

உண்மைதான். போராட்டத்தின் ஆரம்ப நாட்களில், தலைவரை சிறிலங்கா காவல் படை கடுமையாகத் தேடிக் கொண்டிருந்தபோது பலாலி படைத்தளத்தின் எல்லையோடிருந்த பாழடைந்த ஒரு பாடசாலைக் கட்டடத்தினுள் மறைந்து வாழ நேரிட்டபோது அம்மாவின் மகன்களில் ஒருவர்தான் தலைவருக்கு உணவு, தண்ணீர் கொடுத்தார்.

இக்கட்டான காலப்பகுதிகளில், போராட்டப் பயிருக்குக் கவசமாக நின்று பேணி வளர்த்த தேசபக்தர்கள் அவர்கள்.

தனது வாழ்வில் மிகப்பெரிய மகிழ்ச்சியை அம்மா அந்த நாளில் கண்டாள். தலைவர் வந்து தன்னைப் பார்த்துக் கதைத்து விட்டுச் சென்ற அந்த நாளை, அவள் எப்போதுமே நினைவு கூர்ந்து பெருமைப்படுவாள்.

அக்காவின் வீட்டில்தான் அம்மா இப்போதும் இருக்கிறாள். அம்மாவிற்கு வயதாகிவிட்டது. கட்டிலில் இருப்பாள். அவளைப் பார்க்க அவளுடன் கதைக்க எமது தோழர்கள் எப்போதுமே அங்கு போவார்கள். எங்களை அருகில் இருத்தி அணைத்துக் கதைப்பாள். பெற்ற தாயின் அரவணைப்பை பாசத்தை நாங்கள் அதில் உணர்வோம்.

அந்த வீட்டில் எப்போதுமே புலிகளுக்காக அடுப்பு எரிந்து கொண்டிருக்கும். அங்கு போகின்ற எந்தப் போராளியும் ஏதாவது சாப்பிட்டே ஆகவேண்டும். இது அம்மாவின் கட்டளை.
அம்மா எங்களிடம் அடிக்கடி சொல்லுவாள் "நீங்கள் எல்லாரும் தான்ரா என்ர பிள்ளைகள்" அதில் ஒரு பெருமிதமும் திருப்தியும் இருக்கும். ■

இரண்டாவதாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தினால் அரைகுறைத் தீர்வுத் திட்டத்தில் உடன்பாடு காணமுடியாது. அதாவது சிறிலங்கா அரசு தான் விரும்பும் தீர்வுத்திட்டத்திற்கு விடுதலைப் புலிகளை உடன்பட வைக்கமுடியாது. இன்னொரு வகையில் கூறுவதாயின் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தினைச் சிதைத்துவிட முடியாது. மாறாக தமிழீழ மக்களின் போராட்டத்திலுள்ள நியாயத் தன்மைகளை வெளிப்படுத்தவும், போராட்டத்திற்கு சாதகமான நிலைமைகளை உருவாக்கவும் இப்பேச்சுவார்த்தையினை விடுதலைப் புலிகள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்ற அச்சம் சிறிலங்கா அரசுக்கு உள்ளது. இதனால் நிபந்தனையற்ற பேச்சுக்களை விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ள சிறிலங்கா அரசு தயக்கம் காட்டுகின்றது.

எனவே எந்தவகையில் பார்த்தாலும் சிறிலங்கா அரசு இவ்விரு [illegible] நடைமுறைப்படுத்த முடியாத நிலையிலேயே இருக்கிறது. அதனால் ஒருபக்கம் தீர்வுத்திட்டத்தினை விவாதிக்கவிட்டு விட்டு மறுபுறத்தில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு காலத்தை ஓட்டி வருகின்றது.

இப்போது சிறிலங்கா அரசின் முன்னால் உள்ள பிரதான கேள்வி, எவ்வளவு காலம் இப்படிக் காலத்தைக் கழிக்க முடியுமென்பதே. இராணுவ அதிகாரிகளுக்கிடையே எழுந்து வளர்ந்து வரும் மோதல்களும், ஆயுதங்களோடு தலைமறைவாகிவரும் இராணுவத்தினரின் எண்ணிக்கையில் ஏற்பட்டு வரும் அதிகரிப்பும், விடுதலைப் போராட்டம் ஏற்படுத்தும் பொருளாதாரத் தாக்கங்களுமாக எவ்வளவுகாலம் இப்படிக் காலத்தை ஓட்ட முடியும்?

நிச்சயமாக நீண்ட காலம் இப்படிக் காலத்தைக் கடத்தக்கூடிய சாதகமான நிலைமைகள் சிறிலங்கா அரசு தரப்பிடம் இல்லை. இச்சூழலில் ஒரு நம்பிக்கையான ஒளிமயமான எதிர்காலத்தினை தமிழீழ மக்கள் அடைந்து கொள்ளும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்றே வரலாற்று அனுபவம் கூறுகின்றது. ■

## நிகழ்வும் நினைவும்

வாதொழிக்கும் விருப்பம் தொடர்ந்தும் விருப்பமாகவே இருந்து வருகின்றது. இந்த விருப்பம் நாட்செல்லச் செல்ல பலத்த அடிகளை வாங்கி வருகின்றது. பெரும் படைப்பலத்தினைக் குவித்து செயல்படுத்துகின்றபோதும் விடாமறித்த எவருமே இது சாத்தியப்படப் போவதில்லை என்பதனை தெளிவாக உணர்ந்திருப்பர் என்பது நிச்சயமான உண்மையாகும். எனவே முதலாவது அணுகுமுறையில் உண்மையில் எவருமே நம்பிக்கையுடன் உள்ளனர் எனக் கூற முடியாது. ■

## கிளாலி

தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கடற்புலிகளின் பாதுகாப்புடன் மீண்டும் கிளாலி படகு சேவை ஆரம்பமாகியுள்ளதாக தெரிய வருகின்றது. நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்ட கடற்புலிகளின் படகுகளின் காவலுடன் இப்பயணங்கள் நடைபெறத் தொடங்கியுள்ளன எனத் தெரிய வருகின்றது. ■

## புலிகளின் தாக்குதலுக்கு பலி

மூதூர் தோப்பூர் பொலிஸ் நிலைய உதவிப் பொறுப்பதிகாரி விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு பலியாகியதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொலிஸ் நிலைய உதவிப் பொறுப்பதிகாரியுடன் 12 பேர் கொண்ட குழுவொன்று ரோந்து சென்று கொண்டிருந்ததாகவும் இத்தாக்குதலால் அவர்களில் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவிப் பொறுப்பதிகாரி லலித் சந்தனசிறி என்பவரே அத் தாக்குதலில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ■

## கூலி உழைப்பாளிப்...

கிறார்கள். காலையிலிருந்து மாலைவரை தோட்டங்களிலோ, வயல்களிலோ உடலை வளைத்து வேலை செய்துவிட்டு வந்த அலுப்புடன் வீட்டிலே சமைப்பார்கள். வீடு கூட்டுவதிலிருந்து குழந்தை பராமரிப்பு வரை எல்லாமே அவர்கள்தான். கணவனின் முகம் கோணாமல் சாப்பாடு கொடுக்க வேண்டும். தான் வேலை செய்த அலுப்புத் தீரப் போதை தரும் பானங்களைக் குடித்துவிட்டுக் கணவன் தரும் அடி உதைகளையும் தாங்கிக் கொள்ள வேண்டும். சில கணவன்மார்கள் விதிவிலக்காகவும் இருக்கிறார்கள். இரவு அரிசியும் கீரையும் வாங்குவது போக பணம் எஞ்சியிருந்தால் காலையில் சீனியும் தேயிலையும் வாங்குவார்கள். பணம் இல்லையென்றால் வெறும் வயிறுடன் போய் வேலை செய்துவிட்டு தோட்டத்தில் தரப்படும் வெறும் பானை சீனியில்லாத தேநீருடன் சாப்பிடுவார்கள். இப்படித்தான் இவர்களது வாழ்க்கை இருக்கின்றது. வாழ்க்கையே ஒரு சுமையாகத்தான் இருக்கிறது.

இந்த சுமையான வாழ்வு மாற வேண்டுமானால் முதலாளித்துவ ஒடுக்குமுறை, சாதி ஒடுக்குமுறை என்பவற்றுக்கு எதிராகப் போராட வேண்டும். வேலை செய்யுமிடங்களிலும் வீட்டிலும் பெண்களுக்குள்ள சுமையை ஆண்கள் புரிந்துகொண்டாலே இருபாலரும் இணைந்து போராடுவது சாத்தியம். ஒடுக்குமுறைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குபவர்களால்தான் இனத்தின் விடுதலைக்காகவும் போராட முடியும்.

## 1993லும்...

வழமை போலவே இம்முறையும் முன்னுக்குப் பின் முரணாகவே இருக்கின்றது.

### புலிகள் தயார் நிலையில்

இதேவேளை கடந்த ஆண்டில் சிறிலங்கா பாதுகாப்புப்படைகளை தாம் தாக்குதல்களால் நிலைகுலைய செய்த தமிழீழ விடுதலைப்புலிகள் இவ்வாண்டிலும் சிறிலங்கா அரசு இராணுவ ஆக்கிரமிப்புக்களை ஊக்குவித்தால் அவற்றை எதிர்த்து தமிழீழத்தையும் தமிழீழ மக்களையும் காப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வருகின்றனர். எந்நேரத்திலும், எந்த வகை சூழ்நிலையையும் எதிர்கொள்ள விடுதலைப்புலிகள் தயாராக உள்ளனர். ■

## பிரவச தாய்மாருக்கு ஐந்நூறு ரூபா உதவி

இடம்பெயர்ந்தோர் நீக்க நலன்பேணும் கழகத்தினர் அகதி முகாம்களில் தங்கியிருக்கின்ற நீக்க பிரசவ தாய்மார்களுக்கு ஐந்நூறு ரூபா பணத்தினை பிரசவ செலவுக்காக வழங்குகின்றனர். இத்திட்டம் மார்கழி திங்களன்று ஆரம்பிக்கப்பட்டது.

பிரசவத்தினை நெருங்குகின்ற பிரசவத் தாய்மார்கள் கழக அலுவலகத்தில் சென்று பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினர் முயல் வளர்ப்பு, உயர் ரக ஆடு வளர்ப்பு போன்ற திட்டங்களை தமிழீழத்தில் ஊக்குவித்து வருகின்றனர்.



# புலிப் பெண்

புலிப் பெண்.
இவள்
புதியதோர் புறம் படைத்தவள்.

புல்லரைப்
புறமுதுகிடச்செய்யத்தன்
புதல்வனைப் போர்க்களமனுப்பிய
புறப் பெண்ணையன்றோ
இந்தப்
பூவுலகு
அன்று கண்டது.

மார்பில் வேலேந்திய
தன்
மைந்தனைக் காணப்
போர்க்களம் போனவள்,
இன்று
போர்க்கோலம் பூண்டு,
புதுமைகள் படைத்துவிட்டு,
தரணியர் வியந்திடும்
தமிழ்ப் பெண்ணாய்
மாறி விட்டாள்.

அன்று
மென்மையாய், மெல்லிடையாய்
நின்றவள் - இன்று
வன்மையாய் மாறி
வானுயர நிற்கின்றாள்.
இதைப்
புறமமைத்த புலவன் கண்டிருந்தால்
வியந்தன்றோ வீழ்ந்திருப்பான்.

புலிப்பெண்ணே,
போரிடாதவளையன்றோ - அன்று
புறம் பாடியது.
ஆனால்,
போர்க்களமாடிப்
புல்லரை வீழ்த்திய
உன் வீரத்தைப்
புதிய புறம்
புதுமையாய்ப் படைத்திடும்.
போரிடு - நீ
போர்க்களமாடி வென்றிடு.

■ திருமாறன்

## தலைவர் பிரபாகரன் சுலோகம்
### இசைப்பாடல்

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

துணிவுடன் முயற்சியும் தளரா உறுதியும்
துணையெனில் எதனையும் சாதித்து விடலாம் (துணி)

பல்லவி எடுப்பு

பணிவுடன் உரைத்தார் பிரபா கரனே
படைத்துறைச் சாதனை பகர்வதும் அதையே (துணி)

கன்னி

அணியெனத் திரண்டே தடைகளை உடைத்தோம்
அவற்றையும் படியென அமைத்தே உயர்ந்தோம்
பிணியெனத் தொடர்ந்திடும் சாதிய முறையையும்
பெண்ணடிமைத் தனத்தையும் அதனாற் களைவோம்
(துணி)

-ப.தண்டபாணி
தமிழ்நாடு




U.T.O
54 TAVISTOCK PLACE, LONDON WC1H 9
T 071-837 7162 F 071-278 5666 RG

T.C.C
P.O.BOX 694, MULGRAVE NORTH
VICTORIA 3170, AUSTRALIA
Tel 03-457 6347 F 560 8224

L.T.T.E
P.O.BOX 47, 7600 STRUER
DENMARK
Tel/Fax 97-841231

T.C.C
341 RUE DES PYRENEES
75020 PARIS, FRANCE
Tel 435 81142 Fax 435 81191

P.O.BOX 340251
5270 GUMMERSBACH 34
GERMANY

T.C.C
VIA MARIANO STABILE 34
90139 PALERMO, ITALY
Tel / Fax 091-611 3179

T.C.C
GROOT HERTOGINNELAAN 108
2517 BL DEN HAAG, NEDERLAND
T 070 346 1663 F 346 1670

T.C.C
P.O.BOX 1699 VIKA
0110 OSLO 1, NORWAY
Tel 02 191260 F 190114

W.T.C.C
HOFJECKLIN, 7416 ROSELS
SWITZERLAND
Tel/Fax



Printed by [illegible]